பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1	ஞாயிறு 18-12-38 வெகுதான்யஹூ மார்கழிமீ 3உ	முத்து 12

பொருள் அடக்கம்

விஷயம்			பக்கம்
1.	நிலம் யாருடையது?	....	266
2.	குறிப்பு	...	267
3.	போகிற போக்கில்	...	269
4.	வாரச் செய்திகள்	...	271
5.	ரஷியப் பொருளாதாரத் திட்டம் (ஸ்ரீ. எஸ். வேங்கடராமன் பி. ஏ.)	...	273
6.	பெயரும் பாத்திரமும் (சிட்டி)	...	276
7.	ரேடியோ கச்சேரி (ஸ்ரீ. வி. முத்துஸ்வாமி பி. ஏ.)	...	279
8.	கனவா? நனவா? (ஸ்ரீ. பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்.)	...	281
9.	சுழலும் சக்கரம் (ஸ்ரீ. ஸூ. சேதுராமன்)	...	286
10.	விசேஷக் கடிதம் (வஸந்தன்)	...	289
11.	தமிழ் காட்சிப் படங்கள் (ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.)	...	292
12.	வலை வீச்சு	...	295

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



நிலம் யாருடையது?

சென்றவாரம் பிரகாசம் கமிட்டியின் வேலையையும் அதன் முடிவுகளையும் சுருக்கமாகக் குறிப்பிட்டோம். அதன் முடிவுகளில் முதலாவது முக்கியத்துவம் வாய்ந்தது ஜமீன்தாரிப் பிரதேசங்களில் நிலம் யாருடையது என்பதைப் பற்றியதுதான்.

ஜமீன்தாரி (பூரா இனும் கிராமங்களும் இதில் அடங்கினவை தான்) பிரதேசங்களில் இருக்கும் நிலங்கள் ஜமீன்தாருக்குச் சொந்தமல்ல, குடிகளுக்குத்தான் சொந்தம் என்பது கமிட்டியின் முடிவு.

ஜமீன்தாருக்கு அந்த நிலங்களில் யாதொரு பாத்தியதையும் கிடையாது என்பது எளிதில் அர்த்தமாகிறது; ஏனெனில் ஆதியில் ஜமீன்தார் வரி (வாரம்) வசூலிக்கும் ஏஜண்டாக (சர்க்காரின் சிப்பந்தியாக) நியமனம் ஆனாரே தவிர, நிலங்களில் அவருக்கு பாத்தியதை கிடையாது என்பது சாஸனங்களிலிருந்தே தெளிவாகும். அந்தப் பிரதேசங்களில் ஜமீன்தாருக்குச் சொந்தமான தனிநிலங்களும் இருந்தன என்பதும் தெரிகிறது.

ஆனால் 'சொந்தம்' என்ற இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம்? ரயத்துவாரிப் பிரதேசங்களில் நிலங்கள் குடிகளுக்குச் சொந்தமானவை என்று சொல்லும்பொழுதும் என்ன அர்த்தம்?

அரசாங்கத்தின் பாஷைப்படி நிலத்தில் குடியிருக்கும் பாத்தியதை தான் (Occupancy Right) நிலச்சுவான் தாருக்குச் சொந்தம். பூமி அவனுடைய தல்ல; சர்க்காருடையது. பூமிமேல் இருக்கும் சகலமும் குடிகளுடையது; பூமியும் பூமிக்குள் இருப்பனவும் (சுரங்கம் புதையல் முதலியன) சர்க்காரைச் சேர்ந்தது. அந்த நிலத்தில் குடியிருப்பதற்காகச் செலுத்தும் வாடகைதான் கிஸ்தி. நிலம் விற்கும்பொழுதும் வாங்கும் பொழுதும் அந்த குடிபாத்தியதைத்தான் நிலச்சுவான்கள் விற்று வாங்குகிறார்கள்.

ஆகையால் அயன் பிரதேசங்களில் இருப்பதுபோல ஜமீன் பிரதேசங்களிலும் காடுகள் மலைகள் சுரங்கங்கள் முதலியவை சர்க்காரைச் சேர்ந்தவையாகத்தானிருக்க வேண்டும்; ஏனென்றால் அவை ஜமீன்தாருடையவை என்றால் ஜமீன்தார் சர்க்காரின் உரிமையைக் கொள்வதாகிறது.

அது எவ்விதமான கொள்கைக்கும் பொருந்தாத நிலைமை. எனவே ஜமீன்தாருக்கு நிலத்திலிருந்து விளையும் மகசூலின் மேல்வாரப் பாகத்தை வசூலிக்கும் பாத்தியதையைத் தவிர வேறொன்றும் இருக்கமுடியாது. அதாவது மேல் வாரத்திற்கும் பேஷ்கஷ் தொகைக்கும் உள்ள வித்தியாசம்தான் ஜமீன்தாரின் உரிமை என்பது வியக்தமாகிறது.

ஆனால் இது மிகவும் சிக்கலான பிரச்னை. நடை முதலில் நீர் நிலைகளும், காடுகளும், சுரங்கங்களும் ஜமீன்தார்களின் சொத்துக்களாகவே கருதப்படுகின்றன.

இதனால் சர்க்காருக்கு இவ்வளவு வருஷங்களாக ஏற்பட்டிருக்கும் நஷ்டத்திற்கு சர்க்கார் இந்த விஷயத்தில் 1908-ம் வருஷத்திற்குப் பிறகு ஒரு விதமான கவனமும் செலுத்தாததுதான் காரணம்.

அயன்-ஜமீன் பிரதேசங்களில் ஒரே விதமான உரிமைகள் நிலவ வேண்டுமானால் இந்தமாதிரியான சில மூலாதாரமான பிரச்னைகளைத் தீர்த்தாக வேண்டும்.

பிரகாசம் கமிட்டி அறிக்கை சட்டசபையில் விவாதத்திற்கு வரும் பொழுது இவை தீர ஆலோசிக்கப்படும் என்று நம்புகிறோம்.

குறிப்பு

சங்கீத வித்வத் சபை

இந்த வருஷம் சங்கீத வித்வத் சபையும் பைன் ஆர்ட்ஸ் சொஸைடியும் சேர்ந்து கச்சேரிகள் நடத்தப் போவதைக் கேள்விப்பட்டு சந்தோஷப்படுகிறோம். சங்கீத உலகத்தில் ஒற்றுமையே ஏற்படாது என்ற இழுக்கை அகற்ற பிரமுகர்கள் இவ்விதம் முன் வந்ததற்காக அவர்களைப் போற்றுகிறோம்.

வித்வத் சபை கச்சேரி திட்டத்தைப் பார்க்கும் பொழுதே பாரதியார் பாடிய 'இன்பத்தேன்' காதில் வந்து பாய்கிறது. ஆனால் அது இவ்வளவு சுருக்கமாக இருப்பது தான் மனதிற்கு ஒரு குறையாக இருக்கிறது. திட்டத்தில் முடிகொண்டான் வெங்கடராமய்யர் பெயர் தென்படவில்லை. எந்தக்காரணமாயிருந்தாலும் அவர் கச்சேரி இல்லாதது ஒரு பெருங் குறை. ஏனெனில் அநேக அம்சங்களில் அவருடைய பாட்டும் பாணியும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை.

கச்சேரி முறை விஷயமாக சில வார்த்தைகள். சங்கீத வித்வத் சபையின் ஆதரவில் நடக்கும் கச்சேரிகளிலாவது ராகம், தானம் பல்லவி என்ற கர்நாடக சங்கீதத்தின் மூர்ச்சனை ஸ்தானங்கள் போன்ற அம்சங்களை வித்வான்கள் விரிவாகக் கையாள வேண்டும். பொதுவாக $2\frac{1}{2}$ மணிக் கச்சேரியில் $\frac{1}{2}$ மணி ராகமும் $\frac{1}{4}$ மணி தானமும் $\frac{1}{4}$ மணி பல்லவியும் பாடினால் கூடப் போதும். இம்மூன்றில் தான் வித்வானின் மனோபாவத்திற்கும் கல்பனைக்கும் இடமிருக்கிறது. இவற்றைத் தொடவே தொடாமல் வெறும் கீர்த்தனைகளாகப் பாடி முடித்தால் சங்கீதத்தில் சுகபாவம் அற்றும் போகும்; நாளடைவில் கல்பனையே தொலைந்து போகும். வித்வான் கீர்த்தனைகளைக் கக்கும் இயந்திரமாகி விடுவான். வைத்தியநாதய்யரைப் போலவும் பிடில் கோவிந்தசாமி பிள்ளையைப் போலவும் இன்று யார் ராகமும் பல்லவியும் விஸ்தரிக்கிறார்கள்? நாதஸ்வரக்காரர்கள் மட்டும்தானே இன்று பழைய பந்தாவை விடாகல் கைப்பிடித்துக் கொண்டு வருகிறார்கள்.

சங்கீத வித்வத் சபை இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

பகல் வேளைகளில் நடக்கும் சர்ச்சைகளைப் பற்றியும் ஒரு வார்த்தை. மூன்றாம் வருஷத்தில் பியாகடை ராகத்தைப்பற்றி விவாதம் நடந்தது; முடிவே வரவில்லை. ராகம் எந்த முறையில் அதிகமாக அனுஷ்டானத்தில் இருந்து சுகத்திற்கும் ஒத்திருக்கிறதோ அதையே நியதியாக வைத்து விடலாம். அதை விட்டு, ஓயாமல் சர்ச்சை செய்வதில் என்ன பயன்? அதுவும் பகல் 12 மணிக்கு சர்ச்சை ஆரம்பம் என்று அறிவிப்பு. மூன்று மணிக்கு முன்னால் கூட்டம் கூடுவதில்லை. விவாதமும் ஒழுங்காக நடைபெறுவதில்லை; இதையெல்லாம் சீர்திருத்தி நிர்வாகஸ்தர்கள் இந்தத் தடவை சபையின் நடவடிக்கைகளை விமரிசையாக நடத்துவார்கள் என்று நம்புகிறோம்.

வர்தா திட்டம்

மத்திய கல்வி போர்டு நிபுணர்களின் கூட்டமொன்று டிஸம்பர் 3-ம் தேதி புது டில்லியில் கூடிற்று. அதில் வர்தா திட்டத்தைப் பற்றிப் பரிசீலனை நடந்தது.

பம்பாய் பிரதம மந்திரி தலைமை கொண்ட சப் கமிட்டியொன்று வர்தா திட்டத்தை ஆராய்ச்சி செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் படியாக 1938 ஜனவரியில் நியமிக்கப்பட்டது. அக் கமிட்டியின் ரிபோர்ட் மேற்சொன்ன கூட்டத்தில் பரிசீலனைக்கு வந்ததில் கூட்டம் கமிட்டியின் சிபார்சுகளை அநேகமாக ஆமோதித்தது.

வர்தா திட்டத்தைப் பற்றிய தப்பு அபிப்பிராயங்களைக் குறித்து விட்டு, ஸாகிர் ஹுசேன் ரிபோர்ட்டின் படி வர்தா திட்டம் வேலையுடன் கூடிய ஒரு கல்வி திட்டமே யொழிய பொருள் உற்பத்தி திட்டமன்று என்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்த அம்சத்தில் வுட்-ஆபட் அறிக்கையை யொத்தே தான் வர்தா திட்டம் வகுக்கப் பட்டிருக்கிற தென்றும் கூறுகிறது.

ஒரு மூலாதாரமான தொழிலின் மூலமாக ஒரு குறிப்பிட்ட அளவு கல்வியைப்

புகட்ட முடியுமோ என்பதை கமிட்டி ஆராய்ச்சி செய்ததில் கீழ் வகுப்புகளில் வேலை மூலமாகவே கல்வியைப் புகட்டி விடலாமென்றும், மேல் வகுப்புகளில் கலை சம்பந்தமான கல்வியைத் தொழிலுடன் பிணைப்பது அவ்வளவு எளிதல்ல வென்றும் கமிட்டி அபிப்பிராயப்பட்டது. நூற்றல், நெய்தல் தவிர இதரத் தொழில்களை யும்கூட சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அமைக்க வேண்டுமென்றும் கருதிற்று.

வர்தா திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர நிதி விஷயமாகவும் அதை மேல் படிப்புடன் பிணைப்பதற்கான முறை விஷயமாகவும் இக்கமிட்டி ஒன்றும் கூறவில்லை. இவற்றை ஆராய்ச்சி செய்வதற்காக மற்றொரு சப் கமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறது.

வர்தா திட்டத்தின் சாராம்சத்தை கல்வி போர்டார் அங்கீகரித்துவிட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயம். திட்டத்தில் அவசியமான சில திருத்தங்கள் செய்து அதை உருக்குலையாது அபிவிருத்தி செய்ததற்காக வர்தா திட்டக் கமிட்டியாரையும் நாம் போற்றுகிறோம்.

கல்வி வெறும் சொல் (புத்தகப்படிப்பு) மட்டுமல்ல, செய்கையும்கூட (தொழில் பயிற்சி) என்பதை நாம் வெகுநாளாக வற்புறுத்தி வருகிறோம். செய்கையின் துணை யில்லாததால்தான் தற்காலப் படிப்பே சக்தியற்றுச் சோர்ந்து போய் விட்டது. வாழ்க்கையின் போரில் பங்கெடுக்க வல்லமையற்றுப் போயிற்று.

காந்திஜியின் திட்டத்தில் இந்த இணைப்பிற்குத் தான் முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கெடுக்காமல் இந்த முறை அமுலுக்கு வருமானால் நாம் பெரும் பலன்களை எதிர் பார்க்கலாம் என்பதில் சந்தேகமில்லை. மத்திய கல்வி போர்டு சாராம்சத்தில் இதை ஆதரித்து விட்டது ஒரு நல்ல அறிகுறி.

ஜெர்மன் கோபம்

யூதர்களிடம் ஜெர்மனி நடந்து கொள்ளும் மூர்க்கமான முறையை காந்திஜி கண்டித்ததைப் பார்த்து ஜெர்மன் பத்திரிகை ஒன்றிற்குக் கோபம் வந்து விட்டது. அந்தக் கோபத்தில் "காந்தி இப்படி எழுதுவது, அவருக்கோ அவர் இயக்கத்திற்கோ அல்லது இந்தியா-ஜெர்மன் உறவிற்கோ நல்லதல்ல" என்று எழுதிற்று.

அதற்கு காந்திஜி ஆணித்தரமாக பதில் அளித்திருக்கிறார். "இப்படிச் சொல்வது அர்த்தமற்றது. அழகும் அல்ல. ஏனெனில் அதில் பயமுறுத்தும் தொனி இருக்கிறது. எனக்காகவோ, என் இயக்கத்திற்காகவோ, இந்தியா-ஜெர்மன் உறவிற்காகவோ தயங்கி, நான் முற்றிலும் சரியானது என்று முழுமனதுடன் நம்பும் உண்மையைச் சொல்லப் பின் வாங்கினேனானால் நான் ஒரு பயங்கொள்ளி ஆவேன்" என்கிறார்."

ஹிட்லரின் பயமுறுத்தல் கொள்கையைப் பின்பற்றி ஜெர்மன் பத்திரிகை எழுதிய பிதற்றலுக்கு காந்திஜி கம்பீரமான பதில் அளித்திருக்கிறார்.

புரோபேஷனரி டிப்டி கலெக்டர்கள்

அசெம்பிளியில் கொண்டா வெங்கடப் பையாவின் கேள்விக்கு பதில் அளித்த பொழுது 1937-ல் 9பேர் புரோபேஷனரி டிப்டி கலெக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் என்று ஸ்ரீ விசுவநாதம் சொன்னார்.

இந்த சந்தர்ப்பத்தில் புரோபேஷனரி ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், டிப்டி கலக்டர்கள் தேர்ந்தெடுப்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனெனில் இந்த உபயோகமற்ற முறையின்மூலம் பொதுப் பணம் அனாவசியமாக வீணாகிறது. இப்பேர்ப்பட்ட "ஏழைக் குடும்பம் ராஜவைத்தியம்" முறை தேவையே இல்லை; அதில் பலனும் நிர்வாக விஷயத்தில் ஒன்றும் திருப்திகரமாக இல்லை.

நேரடியாக இந்த மாதிரி ஆபீஸர்களைத் தேர்ந்தெடுப்பதில் தலைநரைக்கப் பாடுபட்ட ரெவினியூ சிப்பந்திகளுக்கு உயர்வு ஏற்படுகிறது தடைபடுகிறதைத் தவிர வேறு ஒரு பயனும் கிடையாது என்று நாம் அனுபவத்திலிருந்து நிச்சயமாகக் கூறக்கூடும். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவது தலை சிறந்த திறமை வாய்ந்தவர்களாக நிர்வாகத்தில் துலங்குகிறார்களா? அதுவும் இல்லை. இந்த செலவு அனாவசியம்.

இதை நிறுத்தும் விஷயமாக சர்க்கார் யோசனை செய்வார்களா?

போகிற போக்கில்



சிநேகிதர்களே, இந்த வாரம் எனக்கும் ஓர் புதையல் ஈசன் அருளால் கிடைத்திருக்கிறது. ஈசுவரன்கூடச் சென்றவாரம் என் 'போகிற போக்கில்' பத்தியை வாசித்துப் பார்த்து மனம் இரங்கினாற் போலிருக்கிறது! இவ்வுலகில் பேபர் பார்க்காதவர்கள் யார்? கோவில் அர்ச்சனைக்குக்கூட கல்கண்டு, சர்க்கரை, குங்குமம், கர்ப்பூரம் இவைகளை நியூஸ் பேபரில் மடித்துத்தான் வணக்கமாய்க் கொண்டுபோகிறார்கள். எனக்குத் தெரிந்தமட்டில், மந்திரி வேலை கிடைத்தால் தான் பத்திரிகைகள் பார்க்கவேண்டியது அவசியமில்லை; நேரில் வாசித்தால் ருசிகரமாயும் இராது. 'பிரைவேட் செகிரிடரி' பார்த்து அங்கிகரிக்கக்கூடிய துணுக்குகளை அனுப்பினால் போதும். பண்ணைப் பத்திரிகையாயிருந்தாலும், சில சமயங்களில் கூக்குரலிடுமே? இந்த சொற்பொழிவின் பலன்தான் என்ன?—வடிகாலின் நீரோட்டம் போல் பயனில்லாத வெள்ளப் பெருக்கு—கடலோசை எட்டும் வரையில் தான். சொல்ல வந்த காரியத்தை மறந்துவிட்டேனே!

* * *

"பண்டம் கால்பணம், சுமைகூலி முக்கால்பணம்" என்ற பழமொழி திவ்யமொழி. நமது நவீன நாகரீகத்தில் எதைக் கண்டாலும் இந்த உண்மையை அறியலாம். ருசியும் போஷணையும் தரும் சாப்பாட்டுக்கு அணா 0-1-6 (சாம்பார் பாத்!). வேர்த்து விருவிருக்கச் செய்யும் கசப்புக் காபிக்கும், சிக்கடித்த எண்ணெயில் தயாரிக்கப்படும் சிற்றுண்டிகளுக்கும் அணா நான்கு. உடுத்தும் சாதாரண உடைக்கு ரூ. ஒன்று. ஜரிகை போட்டால் ரூ. மூன்று. அலங்காரத்திற்குத் தங்க நகையானால் ரூபாய் நூறு. வைரத்தோடென்றால் ரூபாய் ஆயிரம். எவ்வளவிற் கெவ்வளவு சாமான் போஷாக்கிற்கும் சுகத்திற்கும் அனாவசியமோ, அவ்வளவிற்கவ்வளவு மதிப்பு கூட, ஜம்பம் கூட. மானிட வாழ்வில் மோசடிக்கும் இழிவுக்கும் இந்த ஜம்பமே முதல் காரணம்.

* * *

மனுஷ்ய வாழ்வைப் போலவேதான் பத்திரிகை வாழ்வும்—எல்லாம் அத்வைதம். விஷயமும், விளம்பரமும் அச்சுப் போடப்படும் 32 பக்கங்கள் பேபரின் விலை ரூ. 15. அதை அலங்கரித்து கைகாட்டி டம்பம்கூவி அழைத்துவரும் 'கவர் பேஜி'ன் (அட்டை) விலை ரூ. 10. இந்த நியாயம் சகிக்க முடியவில்லை. ஆகையால் இந்த வாரம் முதல் "பாரத மணி" ஓர் சாமான்யமான 'கவர் பேஜு' டன் வெளிவரும். "கவர் பேஜே" அனாவசியம். இருந்தாலும் அதையணியாமல் சென்னை நகரத்தில் தெருத்தெருவாய் குழந்தை "பாரதமணி"யை அனுப்ப எனக்குத் தைரியம் வரவில்லை. சென்னைப் பட்டணமல்லவா? அலவந்தி குக்கிராமமா?

* * *

'நெக்டை'யிலிருந்து யோக வேஷ்டிக்கும், யோக வேஷ்டியிலிருந்து லங்கோட்டிற்கும் மாற மகாத்மா காந்தி மதுரையில் தீர்மானம் செய்த சமயத்தில் அவர் மனம் பெரும்பாடு பட்டிருக்கு மென்றே நினைக்கிறேன். சின்னக் காரியமானாலும் மெத்த கஷ்டம். அல்பத்தில் மனதின் பற்றுதலுக்கு அளவே இல்லை. அஞ்சாத மனோதைரிய மிருந்தால்தான் இவ்வுலகில் ஆடையிலே இப்படி ஆழ்ந்திருக்கும் மனதைத் துறந்து துணிந்து நற்காரியம் செய்யலாம். ஆடை ஆபரணங்களாகிய சுமைகளைக் களைந்து மனதை மேல்

போக்கில் செலுத்தலாம். இந்த உண்மையைத் அறியாதவன் யார்? ஆனாலும் இதை சுவானுபவத்திற்குக் கொண்டு வந்தவர்கள் எவ்வளவுபேர்?

* * *

மகாத்மா காந்தியின் தைரிய லட்சுமியின் கடாட்சத்தில் எள்ளளவு கெஞ்சிக் கேட்டு கடன் வாங்கி இம் மாறுதலைச் செய்யத் தீர்மானித்தேன். ஆகையால் இந்த வாரம் முதல் "பாரதமணி" ஓர் உழவன் போல் சாதாரண 'கவர்பேஜு'டன் வெளி வரும். இதிலிருந்து நமது நண்பர்கள் "பாரதமணி"க்கு ஏதோ ஒரு ஆபத்து வந்துவிட்டதென்று நினைக்கவேண்டாம். ஒரு ஆபத்தும் வரவில்லை, சுகமாய் வளர்ந்து கொண்டுதான் வருகிறது. இளம் கன்றுக்குட்டிபோல் பயமறியாமல் பிராட்வேயில் துள்ளிவிளையாடிக்கொண்டுதான் வருகிறது. ஆனாலும் நகரத்தில் பிறந்து வளர்கிற கன்றுக்குட்டிதானே? தாய்ப் பசுவின் பால்தான் கொஞ்சம் குறைவு! அன்னியர்கள் காப்பி குடிப்பதற்காக, அதிகாலையில் தாய்ப்பசுவை ஒட்டக் கறந்து விடுகிறார்கள். கன்றுக்கு மிச்சம் அழகிய வாய்ப்பூட்டுதான். போதும். உயிர் இருந்தால் போதும். இளம் கன்று பயமறியாது. ஈசன் வளர்ப்பான்.

* * *

அழகிய கொழுத்த 'கவர் பேஜ்' போனாலும் விஷயங்கள் அடங்கிய பக்கங்களை ஜாஸ்தி செய்திருக்கிறோம். வைக்கோல் கட்டாயிருந்தாலென்ன? கதிர்ப் போரா யிருந்தாலென்ன? சென்னையில் யாருக்கு இதையெல்லாம் கவனிக்க நேரமிருக்கிறது! எட்டு பக்கங்கள் ஜாஸ்தி செய்திருக்கிறேன். இதுவும் போதாது. என்னுடைய ஆசைக்கு அளவில்லை. கடையில் போட்டால் சந்தாதாரருக்கு அவர் சொடுத்த காசு திருப்பி வரும்படியான ஸ்திதிக்கு "பாரதமணி"யைப் பெருக்க வேண்டு மென்பதுதான் என் அவா. அந்த விஷயம்தான் உங்களுக்குத் தெரியுமே. விளம்பரப் பெருக்கைபொருத்ததுதான். கடைக்காரனிடமிருந்தே விளம்பரக் காசைக் கொண்டு பத்திரிகையை அச்சுப்போட்டு அவனிடமே அந்த விலைக்கே விற்றுவிட்டால் போட்ட காசை திருப்பி எடுத்து விடலாமே. சந்தாதார்களுக்கும் செலவில்லை. எனக்கும் கவலையில்லை. நமது நாகரீகமே நாகரீகம்! எல்லாம் இலவசமாய்க்கிடைக்கவேண்டும். வாசலில் உட்கார்ந்து தூணில் சாய்ந்து கொண்டு 'ஜபம்' செய்வது போல் சும்மா இருக்கவேண்டும். ஆனால் 10 மணிக்கு இலையில் தொன்னைநெய்யும் பருப்பும் வடையும், பாயசமும் அதுவாகவே வந்து விழ வேண்டும். நெய் 'முழம்' என்ன விலை என்று சாந்தமாய் போஜனமான பிறகு கேட்க வேண்டும்!

* * *

கடலில் நீருண்ட மேகம் அந்த நீரைக் காட்டிலும், வயலிலும் வழிதப்பிப் பொழிந்தாலும், அந்த நீர் எப்படியாகிலும் மறுபடியும் தாய்க் கடலை யடைகிறதல்லவா? பத்திரிகை உலகிலும் இதே அத்வைதக் கொள்கை தான். இதன் அர்த்தம் என்னவென்று நீங்களே தேடித் தடுமாறித் தெரிந்துகொள்ளுங்கள். ஆசிரியருக்கும் சில விஷயங்களில் பிரதம மந்திரியைப் போல் சில உரிமைகளுண்டு. ராஜாஜியைப் போல் உபமான உபமேயங்களை (கவி காளிதாசன்போல்) நமது வறண்ட தமிழ்நாட்டில் வாரித் தெளிக்க வேண்டுமென்ற ஆசை என்னைக் கொஞ்ச நாளாய் (காங்கிரஸ் மந்திரிபதவி ஏற்றுக் கொண்டது முதல்) கொள்ளைகொண்டிருக்கிறது. "பாரதமணி"யின் கவலை நீங்கினால், ராஜாஜியைப்போல் கால்திட்டமாவது, உல்லாசமாய் உபமானம் உபமேயங்களை அள்ளி இறைக்கலாமென்று எண்ணுகிறேன். பூமாதேவிக்கு மனப்பூர்வமாய் விதைகளை அர்ப்பணம் செய்ய வேண்டியது தானே நமது கடமை? முளைக்க வைக்கிறது ஈசன் செயல். பத்துக்கு ஒன்பது பழுதுபோனாலென்ன? ஒன்று வட விருக்ஷமாகலாமே!

மணி.

வாரச் செய்திகள்

டிஸம்பர் 7.

குடியேற்ற நாட்டு மந்திரி ஸ்ரீ. மால்காம் மக்டொனல்ட் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருக்கும் குடியேற்ற நாடுகளில் எதையும் ஜெர்மனிக்குக் கொடுக்கப் போகிறதில்லை என்று கூறுகிறார்.

இதாலி முழுதும் மாணவர்கள் 'டியூனிஸ்' பிரதேசத்திற்காக வேண்டி ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்.

ஜெர்மன் அந்நிய நாட்டு மந்திரி ரிப்பன்டிராப்பும் பிரஞ்சு அந்நிய மந்திரி பானட்டும் பாரிஸில் கூடி இருதேசங்களும் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வதில்லை என்று ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்கள்.

கல்கத்தாவில் ஒரு சணல் மில்லில் வேலை நிறுத்தம் உதயமாகிறது.

ராஜ்கோட் சத்தியாக்கிரஹத்தில் சர்தார் படேலின் புதல்வி ஸ்ரீமதி மணிபென் படேல் கைது செய்யப்படுகிறார்.

* * *

டிஸம்பர் 8.

பிரான்ஸுக்கு விரோதமாக இதாலியிலும், இதாலிக்கு விரோதமாக டியூனிஸிலும் ஆர்ப்பாட்டங்கள் ஜீமூதமாக நடக்கின்றன.

முதல் நாள் சொன்னது போதாதென்று ஸ்ரீ. மாக்டொனல்ட் குடியேற்ற நாடுகளை ஜெர்மனிக்குக் கொடுக்கப் போவதில்லை என்று மறுபடியும் ஊர்ஜிதம் செய்கிறார்.

ஸ்ரீ டப்கூபர் பாரிஸுக்கு விஜயம் செய்து ஹிட்லரை தாக்குகிறார். ஆமாம், வாய்ப்பேச்சில்தான்!

சென்னை சட்டசபையில் சிறு துறைமுக நிதி மசோதா நிறைவேறுகிறது.

ஹைதராபாத்தில் கிளர்ச்சி வலுத்து வருகிறது. சேனாபதி பாபத்துக்கு இரண்டு வருஷ சிறைவாசம் கிடைக்கிறது.

டிஸம்பர் 9.

பிரிட்டிஷ் பாலஸ்தீனக் கொள்கை பிரபுக்கள் சபையில் எதிர்க்கப்படுகிறது. லார்ட் சாமுவேல் பாலஸ்தீனத்தில் அரபிய தேசிய இயக்கம் இருக்கிறது என்று சுட்டிக்காட்டி யூதர்கள் குடியேறுவதற்கு ஓர் வரையறுப்பும் வேண்டும் என்று கூறுகிறார்.

காமன்ஸ் சபையில் ஸர் ஸாமுவேல் ஹோர் தாம் பத்திரிகை உரிமைக்கு இடைஞ்சல் உண்டாக்கவில்லை என்று சாதிக்கிறார்.

டெல்லியில் கூடிய மத்தியக் கல்வி அட்வைஸரி போர்ட் வர்தா திட்டத்தை ஒப்புக் கொள்ளுகிறது.

தன்மீது சீறிய நாஸிப் பத்திரிகை கேவலமாகவும் பொருத்த மில்லாமலும் தாக்கியிருப்பதாக காந்திஜி கூறுகிறார்.

அஸ்ஸாம் அஸெம்பிளியில் காங்கிரஸ் மந்திரிசபையின் பேரில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்படுகிறது.

ஐக்கிய மாகாண அஸெம்பிளி மெம்பர்கள் கொஞ்சம் சொந்த அலுவலாகப் போய்விட்டபடியால் தலைவர் சபைக்கு கால்மணி நேரம் லீவு கொடுத்தார்.

சென்னை அஸெம்பிளி ரொம்ப ஜரூர்! இமைப்பொழுதில் மலபார் ஆலயப் பிரவேச மசோதாவை விவாதித்து நிறைவேற்றுகிறது.

* * *

டிஸம்பர் 10.

பிரஞ்சு சபையில் பிரதம மந்திரி தன் கொள்கையைப் பற்றி காரசாரமாக விளக்கிப் பேசி அதை ஒப்புக்கொள்ளாதவர்கள் தன்னைத் தள்ளிவிடலாம் என்று எதிர் கட்சிக்கு அறை கூவுகிறார். கடைசியில் சபை பிரதம மந்திரியின் பேரில் நம்பிக்கையைத் தெரிவிக்கிறது.

பாலஸ்தீனத்தில் மிருகத்தனமாக பிரிட்டிஷ் துருப்புகள் நடந்துகொள்வதாகக்

கூறப்படுவதை மறுத்து குடியேற்ற நாட்டுக் காரியாலயம் ஓர் அறிக்கை வெளியிடுகிறது.

ஸீனர் கெய்டா டியூனிஸ் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டு இதாலியின் ஏகாதிபத்ய ஆசையைப் பட்டவர்த்தனமாக வெளியிடுகிறார்.

காந்திஜி கதருக்கென்று தனி மந்திரி ஏற்படுத்த வேண்டுமென்று 'ஹரிஜனில்' எழுதுகிறார்.

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. போஸ் வங்காள கவர்னரையும் உதவி இந்தியா மந்திரி கர்னல் மூர்ஹெட்டையும் கண்டு இரண்டுமணி நேரம் பேசுகிறார்.

* * *

டிசம்பர் 11

அமெரிக்க உள்நாட்டு மந்திரி ஸ்ரீ கார்டல் ஹல் மிருக பலத்தை எதிர்ப்பதற்கு அமெரிக்கா தயாராக இருப்பதாகக் கூறுகிறார்.

லண்டனில் நடக்கப் போகும் பாலஸ்தீன் மகாநாட்டில் மப்டியைச் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று 54 அராபியத் தலைவர்கள் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

வர்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடுகிறது. தேசத்தின் பொது நிலைமையைப் பற்றி தலைவர்கள் காந்திஜியைப் பேட்டிகண்டு பேசுகிறார்கள்.

ஸ்ரீ. ஸி. ஆர். ரெட்டிக்கு நாகபுரியில் திடீரென்று ஞானோதயம் உண்டாகி காங்கிரஸ் மந்திரி சபைகளைப் பாராட்டிப் பேசுகிறார். காங்கிரஸை நாட்டின் சக்தி என்று அவர் கூறுகிறார்.

சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் கனம் டாக்டர் ராஜன் ஹிந்துஸ்தானியின் அவசியத்தை விளக்கி, ஹிந்தி எதிர்ப்பாளரின் காலித்தனத்தை அரசாங்கம் நிச்சயம் ஒழிக்கும் என்று தெரிவிக்கிறார்.

டிஸம்பர் 12

மெமல் பிரதேச தேர்தலில் நாஸிகளுக்கு வெற்றி நிச்சயம் உண்டாகுமென்று தெரிகிறது.

நாஸிப் பத்திரிகைகள் அமெரிக்காவைத் தாக்குகின்றன.

சர்தார் படேல் ராஜ்கோட் தர்பார் விடுத்துள்ள அறிக்கை திவானின் நம்பிக்கைத் துரோகத்தைக் காட்டுகிற தென்று கூறுகிறார்.

அகில இந்திய மாணவர் மகாநாட்டிற்குத் தலைமைவகிக்க ஸ்ரீ. ஜவஹர்லால் நேரு மறுக்கிறார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கதரைப் பற்றியும் கிராமக் கைத்தொழில்களைப் பற்றியும் ஆராய்கிறது.

டில்லி சிவமந்திரம் சத்தியாக்கிரஹத்தில் பதினைந்து பேர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

* * *

டிசம்பர் 13

இதாலி பிரான்ஸின் மீது படையெடுத்தால் பிரிட்டன் பிரான்ஸின் உதவிக்குச் செல்ல வேண்டு மென்று குறிப்பிட்ட ஒப்பந்த மெதுவும் இல்லை என்று சேம்பர்லேன் பார்லிமெண்டில் கூறுகிறார்.

வெளிநாட்டு யூதர்கள் ஜெர்மன் யூதர்களுக்குப் பண செளகர்யம் செய்து கொடுத்தால் அவர்கள் வெளியேறிச் செல்லலாம் என்று ஒரு பர்லின் பத்திரிகை கூறுகிறது.

காங்கிரஸ், மார்ச் மாதம் பத்து, பதினொன்று, பனிரண்டு தேதிகளில் திரிபுரியில் கூடுவதாகத் தீர்மானிக்கப் படுகிறது.

இப்போது தென் சைனாவில் நடக்கும் போரில் தான் சீனத் தலைவர் சியாங் கெய் ஷக் எதிர்காலம் அடங்கி யிருப்பதாக ஜப்பான் தளகர்த்தர் கூறுகிறார்.

ரஷியப் பொருளாதாரத் திட்டம்

[ஸ்ரீ. எஸ். வெங்கடராமன் பி. ஏ]

உலகின் கண் ரஷ்ய தேசத்தில்தான் பொருளாதாரத் திட்டம், பரந்த நோக்கத்துடனும், தீவிர முயற்சியுடனும், சமீப காலத்தில் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. ரஷ்யாவின் அபேத வாதத் திட்டம், இருபதாவது நூற்றுண்டு உலகத்தின் கவனத்தையே கவர்ந்திருக்கிறது. தற்காலத்திய பொருளாதார நூலை ஆராய்ச்சி செய்வோருக்கு, அபேத வாதத் திட்டத்தின் லக்ஷ்யங்களையும், அந்த லக்ஷ்யங்களை நடவடிக்கைக்குக் கொண்டு வரும் வழிகளையும் தெரிந்து கொள்வது மிக்க அவசியம்.

ரஷ்யா, அநேக ஐந்து வருடத் திட்டங்களை ஒன்றன்பின் ஒன்ருக இடைவிடாமல் நிர்மாணித்து அநுபவத்திற்கு கொண்டு வந்தது உலகம் அறிந்த விஷயம். முதல் ஐந்து வருடத் திட்டத்தின் ஆரம்பத்தில் ரஷ்யா தேசம் மிகவும் பிற்போக்கான பண்டைக்கால முறைகளைப் பின்பற்றும் தொழில் நாடாய் இருந்தது. மேலும், ஏற்றுமதி, இறக்குமதி, போக்கு வரவு, முதலியன தற்கால நாகரீக முறையில் திருத்தி யமைப்பதற்கும் போதிய அளவு முயற்சி பெருமல் இருந்து வந்தன. ரஷ்யாவின் இந்நிலைமைக்கும், நம் நாட்டின் தற்போதைய நிலைமைக்கும், மிக்க வித்தியாசமில்லை. அக்காலத்தில் ரஷ்யாவின் மொத்த வருவாயின் மிகுந்த பாகத்தை விவசாயமே ஈன்று வந்தது. பெரும்பான்மையான ஜனங்கள் கிராமங்களில் ஜீவனம் செய்துவந்தார்கள். 1928ம் வருடத்தில் நகரங்களின் ஜனத்தொகை மொத்த ஜனத் தொகையில் 100க்கு 18 விகிதம் இருந்தது. (இந்தியாவில் 1931ல் 100க்கு 11 விகிதம்) பலவிதமான இயந்திர சாலைகளிலிருந்த தொழிலாளர்களும் வேலையாட்களும் சேர்ந்து 1000க்கு 142 விகிதம் ஆயினர்.

முதல் ஐந்து வருடத்திய திட்டத்தின் நோக்கமானது ரஷ்யாவை "பெரும் பொருளீட்டும் தொழில்" முறையில் ஈடுபடும் நாடாக மாற்றுவதாயிருந்தது. அத் திட்டத்தின்படி ரஷ்யாவானது 100க்கு 94 விகிதம் "பெரும் பொருளீட்டும்" தொழில் முறையைக் கைக் கொண்ட நாடாயிற்று.

இந்தியாவிலும் சமீபத்திலும் "பெரும் பொருளீட்டும்" முறைத் தொழில் உலகின் கவனத்தை இழுக்குமளவு முன்னேற்ற மடைந்திருக்கிறது. ஆனுல் இம் முன்னேற்றமானது, வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உதாரணமாக, நம்நாட்டில் தொழிற்சாலைகளில் சர்க்கரை பெருமிதமாக உற்பத்தி செய்யப் படுவதால் இப்பொழுது சர்க்கரையின் இறக்குமதி மிகவும் குறைந்து விட்டது. இரண்டு வருடங்களில் சர்க்கரையே இறக்குமதி செய்யப் படாதென்றும் தோன்றுகிறது. ஆனுல் சர்க்கரை செய்விக்கும் இயந்திரமானது நம் நாட்டிலேயே செய்யப்படவில்லை. சர்க்கரைத் தொழிலுக்கு சர்க்கார் உள்நாட்டுப் பாதுகாப்புக் கொடுத்திருப்பதினுல் சர்க்கரை செய்விக்கும் இயந்திரங்கள் மேல் நாடுகளிலிருந்து ஏராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. சர்க்கரையைப் பற்றிய இந்த உண்மையை மற்ற இயந்திரங்கள் சம்பந்தப்பட்ட தொழில்களிலும் காணலாம். இந்திய அரசாங்கத்தார் ஓர் பெரிய "ரெயில்வே" நிர்வாகத்தை நடத்துகிருர்கள். ஆனுல் 'இஞ்சின்'களையும் இயந்திரங்களையும் அவர்கள் இந்த நாட்டில் செய்யவில்லை.

ரஷ்ய தேசத்தின் அதிகாரிகளோவெனில், தொழிற்குரிய கருவிகளையும், இயந்திரங்களையும்பிறநாடுகளிலிருந்து வரவழைப்பதற்குப் பதிலாக தாங்களே செய்யத் தீர்மானித்தார்கள். நாட்டின்பொருளாதாரத்தைத் திருத்தியமைப்பதற்கு இம்முடிவு இன்றியமையாததாகக் கருதப்

பட்டது. இன்றைய தினம் ரஷ்யா தனக்கு வேண்டிய தொழிற் கருவிகளையும் தொழிற் சாதனங்களையும் மற்ற இயந்திரங்களையும் செய்ய வல்லதாயிருக்கிறது. 1931-ல் உலகத்திலேயே இயந்திரங்களை வெகுவாக உற்பத்தி செய்வதில், ரஷ்யா இரண்டாவது ஸ்தானம் பெற்றுவிட்டது. அங்கே எஃகு, இரும்பு, இவைகள் சம்பந்தப்பட்ட புதிய தொழிலும், மின்சாரம் சம்பந்தப்பட்ட தொழிலும் அசாதாரண முன்னேற்றத்தை அடைந்து விட்டன. விவசாயமும் நாகரீக முறையில் மாற்றி யமைக்கப்பட்டது. ஐந்து வருடத்திய திட்டத்தின் ஆரம்பத்தில் 100-க்கு 45 விகிதம் தானிய வகைப் பயிர்கள், அரிவாள்களாலும், கைக்கத்திகளாலும் அறுவடை செய்யப்பட்டு வந்தன. விதை விதைத்தல், 100க்கு 70 விகிதம் கையால் செய்யப்பட்டு வந்தது. அறுவடை 100க்கு 40 விகிதத்திற்குக் குறையாமல், பண்டைக்கால கை இயந்திரங்களால் செய்யப்பட்டு வந்தது. ஆனால் முதல் ஐந்து வருட திட்டத்தின் முடிவில் ரஷ்ய விவசாய முறையில், இயந்திரக் கலப்பைகளும், விதை விதைக்கும் கருவிகளும், பெரிய அறுவடை இயந்திரங்களும், மற்ற சாதனங்களும் கையாளப்பட்டு வருகின்றன. முதல் ஐந்து வருடத்திற்குள் அதாவது (1928 முதல் 1933 வரை) விவசாயமானது விவசாயிகளுக்குப் பொது உரிமையாக மாற்றப்பட்டது. குறுகிய விஸ்தீரணமுள்ள நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, பெரிய விசாலமான பண்ணைகளாக மாற்றப்பட்டு, மின்சார இயந்திரங்களையும், மின்சார சக்தியையும் பெரும்பாலும் உபயோகிப்பதற்குத் தகுதியாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இத்தகைய அதிசயிக்கத் தக்க பொருளாதாரத் திட்டத்தை வகுத்து நடத்தையில் சொற்ப வருடங்களுக்குள் செய்து காட்டிய பெருமையும், புகழும் ரஷ்யாவுக்கே தான் உரியது. மிகவுப் பழமையானதும், பிற்போக்கானதுமாகிய முறையிலிருந்து, “பெரும் பொருளீட்டும்” முறையில் விவசாயமும் தொழில்களைப் போலவே மாறுதலடைந்தது சமீபகாலத்திய அரிய நிகழ்ச்சிகளிலொன்று.

தற்சமயம், ரஷ்யா பொருளீட்டும் முறையை மேலும் மேலும் விருத்திசெய்வதில் முனைந்து ஈடுபட்டிருக்கிறது. இக்காரணத்தினுல்தான் வெளித் தோற்றத்திற்கு ரஷ்யாவின் பொதுவுடைமை கவர்ன்மெண்டார், ஜனங்களுடைய “விலைக்கு வாங்கும்” சக்தியையும் செளகரியத்தையும் புறக்கணித்ததாகப் புலப்படுகிறது. ஆனுல் உண்மையில் அவ்வாறில்லை என்பது சற்று ஊர்ந்து கவனிப்போமாகில் நன்கு விளங்கும். எதிர்கால பொருளீட்டுதலைத் திடமான நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதின் நிமித்தம், ஜனங்கள் சிறிதளவு சில காலம் கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தார்கள். ரஷ்யாவானது கல்வியை நாடு முழுவதும் பரவச் செல்வதிலும், இயந்திரத் தொழிற் சாதனங்களை முதிர்ச்சிக்குக் கொண்டு வருவதிலும், மின்சார சக்தியை எல்லாத்துறைகளிலும் உபயோகப் படுத்துவதிலும், பொருளீட்டுவோரின் சகலவிதமான சாமான்களைச் செய்வதின் மூலமாகப் பொருளீட்டும் சக்தியை அதிகரிக்கச் செய்வதிலும், உயர்ந்த முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. ஜனங்கள் வேண்டிய அளவு பொருளீட்டும் சக்தியைப் பெற்ற பிறகு, ரஷ்ய தேசத்தில் குடிகளுக்கு வேண்டிய பொருள்களைத் தாராளமாக உற்பத்தி செய்வதில் யாதொரு தடையுமிராது. எதிர் காலத்திய நன்மையின் பொருட்டும், உயரிய லக்ஷ்யங்களின் பொருட்டும், தற்சமயம் நேரிடும் இன்னல்களைப் பொருட் படுத்தாமல், ஏற்றுக் கொள்ளும் ரஷ்யாவின் இயல்பானது, அதன் விடாமுயற்சியையும், தீர்க்க தரிசனத்தையும், அஞ்சா நெஞ்சத்தையும் வலியுறுத்திக் காட்டுகின்றது. ரஷ்யாவின் பொருளாதார முறையானது ஓர் தீவிர திட்டத்திற்கும், திட்ட மில்லாமைக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டுமளவில், அது உலகத்திற்கே பின்பற்றுவதற்குச் சிறந்த உதாரணமாய் இருக்கின்றது.

கடைசியாக, அபேதவாதத் திட்டத்திற்கும், முதலாளித் திட்டத்திற்குமுள்ள முரண்பாடுகளைச் சற்று ஆராய்வோம்:—

(1) அபேதவாதத் திட்டத்தின்படி அரசாங்கமே, பொருளீட்டும் சாதனங்களுக்கும், பொருளீட்டும் சக்திக்கும், பயிரிடும் நிலங்களுக்கும் ஏகபோக உரிமை

பெற்றிருக்கிறது. ஆனால் முதலாளித் திட்டமானது, மேற் சொல்லப்பட்ட உரிமைகள் பிரத்தியேக நபர்களுக்குத் தான் உரியது என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

(2) அபேதவாதத் திட்டத்தில், பொருளீட்டுதல் முழுமையும் "தொழிலாளிகளின் அரசாங்"கத்தால் கைப்பற்றப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. முதலாளித் திட்டத்திலோ, உற்பத்தி செய்யப் போகும் பொருள்களின் அளவும், நேர்த்தியை நிர்ணயிக்கும் அதிகாரமும் தனிப்பட்ட முதலாளிகளுக்கே உரியனவாயிருக்கின்றன.

(3) அபேத வாதத் திட்டத்தில், வியாபாரப் போட்டிக்கும், அதனால் ஏற்படும் விலை ஏற்றம், விலை இறக்கம், இவைகளுக்கும் இடமே கிடையாது. ஆனால் முதலாளியின் நிர்வாகத்திலோ, வியாபாரப் போட்டியில் மிதமிஞ்சிய லாபத்தைப் பெறுதல் என்ற தந்திரம் உள்ளடங்கியிருப்பதால், முதலாளித் திட்டத்திற்கு வரம்பற்ற போட்டியே உயிர் நாடி.

ரஷ்யா தேசம் உலகத்திலேயே ஓர் பரபரப்பை உண்டுபண்ணி, உண்மை ஆராய்ச்சிக்காரர்களுடையவும், உலகத்தின் முற்போக்கிற்காக அல்லும் பகலும் சுயநலமின்றி உழைக்கும் தலைவர்களுடையவும் நன்மதிப்பைப் பெற்ற ஒரு பொருளாதாரப் புரட்சியைத் திட்டம் வகுத்து நடத்தி வைத்திருக்கிறது. அவற்றின் நன்மைகளையும் பயன்களையும் நாம் செவ்வனே எடுத்துக் காட்டி, மற்ற தேசங்களுக்கும், முக்கியமாய், சுதந்திரம் போரில் தத்தளிக்கும் நம் தாய் நாட்டிற்கும், ஓர் வழிகாட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

உதிர்ந்த மணிகள்

ஜனங்கள் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றித் தான் பிரசங்கிப்பது என்று இருந்தால், இந்த உலகம் பெரிய மௌனத்தில் ஆழ்ந்து விடும்.

—ஸ்ரீ டபிள்யூ. எஸ். மாரிஸன்.

* * *

கட்சிக் கட்டுப்பாடு மட்டும் இல்லாமல் போய் விட்டால் ஜனநாயகம் நிமிஷத்தில் செத்துப் போகும். —ஸ்ரீ. கே. எம். முன்ஷி.

* * *

கெட்ட அரசாங்கம் தனக்கு வேண்டியவர்களுக்கு வேலை கொடுக்கிறது. ஆனால் நல்ல அரசாங்கம் லாயக்கானவர்களுக்கு வேலை கொடுக்கிறது. —லார்ட் ஹாலிபாக்ஸ்.

* * *

மனித சம்பந்தத்தைச் சீர்படுத்தி ஸமூக வேற்றுமைகளை நீக்கி, மனிதனின் மேலான உணர்ச்சிகளை வளர்த்து கஷ்டங்களை நீக்கும் மருந்து போலுள்ள மதம் இன்று பள்ளிக் கூடங்களில் பகிஷ்கரிக்கப் பட்டிருக்கிறது.

—ஸ்ரீ ராதா கமால் முகர்ஜி.

* * *

நான் என் வரிக்கப்போர் கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அது மனித முன்னேற்றத்தில் முழு உண்மையையும் தெரியப்படுத்த வில்லை என்ற நம்பிக்கையால் தான். ஸ்ரீ ஸரத் போஸ்.

கதரைத் தரிப்பதென்றால், சுதந்தரத்தைத் தரிப்பதாக நான் கருதுகிறேன். இந்த அர்த்தத்தை மனப்பூர்வமாக ஒப்புக் கொள்வதாயிருந்தால் கதரையும் கிராமக் கைத்தொழில்களையும் கவனித்துக் கொள்ள தனியாக ஒரு மந்திரி இருக்கலாம். —மகாத்மா காந்தி.

* * *

சர்க்கார் மனிதனுக்காக ஏற்பட்டது. பல நூற்றாண்டுகளாகப் பாடுபட்ட பிறகு அவனை அவனுடைய சிருஷ்டியான சர்க்காரே பயமுறுத்துகிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள யாரும் இதை ஒப்புக்கொள்ள முடியாது. —ஸ்ரீ அந்தோனி ஈடன்.

* * *

கிராமத்தினரின் தினசரி வேலைகளைப் பார்த்தால், அவர்கள் சுக துக்கங்களைக் கேட்டால், கிராமப் பாட்டுக்களை ஆராய்ந்தால், நமக்குள் (ஹிந்து முஸ்லீம்களுக்குள்) சில வேற்றுமை இருந்தாலும் ஒற்றுமை இருக்கிறது; பழைய நாட்களிலிருந்து ஜனங்களின் வாழ்க்கையை உருவாக்கி வரும் பாந்தவ்ய பாவம் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்வீர்கள். —ஸ்ரீ. ரியஸி உல் கரீம்.

* * *

வசைமாரி பொழிவது பலவீனத்தின் அடையாளம். —ஸ்ரீ. சுபாஷ் போஸ்.

பெயரும் : : பாத்திரமும்

"சிட்டி"

மூன்று நான்கு வாரங்களாக ஆசிரியர் கண்ணில் படாமல் தலை மறைவாகத் திரிந்து கொண்டிருந்தேன். பார்த்துவிட்டால் கதை கேட்பாரே என்ற பயம் தான். துரதிர்ஷ்ட வசமாக நேற்று பீச்சில் என்னைப் பார்த்துவிட்டார். அவர் வாயைத் திறப்பதற்கு முன் நானே முந்திக் கொண்டேன்.

"கதை வந்து சேர்ந்ததா?" என்றேன்.

"இல்லையே. என்ன கதை?" என்றார்.

"நேற்றுத் தான் ஒரு கதை அனுப்பினேன். தபாலுக்கு நேரமாய் விட்டதோ என்னவோ."

"இருக்கும். ரொம்ப சந்தோஷம். இன்று கூட நினைத்துக்கொண்டிருந்தேன். லெட்டர் கூட எழுதவேண்டுமென்று நினைத்தேன்." என்றார்.

"நல்ல வேளை நானே அனுப்பிவிட்டேன். சரி, நான் சாவகாசமாய்ப் பார்க்கிறேன். வரட்டுமா?" என்று ரொம்ப அவசரமாய் அவரை விட்டு நீங்கினேன்.

அவரிடமிருந்து தப்பித்துக்கொண்டது பெரிய காரியமல்ல. கதையனுப்பியதாகச் சொன்ன பொய்யை மெய்ப்பிக்க வேண்டுமே.

காலை முதல் கதை எழுத முயற்சி செய்கிறேன். ஒன்றும் பிரயோசனமில்லை. கதையைப்பற்றிக் கவலையில்லை. எத்தனையோ கதை எழுதிவிடலாம். கதைப் பாத்திரங்களுக்குப் பெயர் கொடுப்பதில் தான் பெரிய தொந்திரவாயிருக்கிறது. அனுபவத்தில் கிடைத்த ஒரு டஜன் பெயர்களை எத்தனையோ கதைகளில் உபயோகித்தாய் விட்டது. திரும்பவும் அதே பெயர்களையே உபயோகிக்க மனம் வரவில்லை.

ராமசாமி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். குப்புசாமி ஆபீஸுக்குப் புறப்பட்டான். நாராயணன் கடைக்குப் போனான்......என்று இந்த மாதிரியான சாதாரணப் பெயர்களுடன் வேண்டிய கதைகள் எழுதியாய்விட்டது. கதாநாயகிகளும் சமயோசிதம்போல் தோன்றியிருக்கிறார்கள். மீனாக்ஷி குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொண்டாள். வாசலில் பார்வதி நின்று கொண்டிருந்தாள். உள்ளே கமலா தயிர் கடைந்து கொண்டிருந்தாள். லக்ஷிமிப் பாட்டி தோசைக்கு அரைத்துக் கொண்டிருந்தாள். வேலம்மாள் தயிர் கொண்டுவந்தாள். கருப்பாயி கீரை கொண்டு வரவில்லை.........இந்தக் காட்சிகளையும் வேண்டிய மட்டும் கற்பனை செய்தாய் விட்டது.

புதிதாகக் கதை எழுதுவதற்குப் புதுப் பெயர்கள் அகப்படுவது தான் கஷ்டமாயிருக்கிறது. சில இங்கிலீஷ் ஆசிரியர்கள் கதைகளுக்குப் பெயர் அகப்படாவிட்டால் டெலிபோன் டைரக்டரியை எடுத்துப் பார்ப்பது வழக்கமாம். நானும் அந்த முறையைக் கையாளலாமென்று நினைத்தேன். என்னுடைய கதாநாயகர்கள் நாயகிகள் வீடுகளில் டெலிபோன் கிடையாது என்று தான் தெரிகிறது. டைரக்டரியில் எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன; என் கதைக்குப் பொருந்த வேண்டுமே. கதை இயற்கைக்கு மாறாக இருக்கிறது என்று சொல்லி விடுவார்களே. கதைக்குப் பொருத்தமான பெயர்களோ ரொம்பக் கொஞ்சமாகத் தான் இருக்கின்றன. அந்தப் பெயர்களை நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் உபயோகித்து விடுகிறார்கள்.

'லக்ஷிமி' என்ற பெண் வராத கதை இருப்பதே ரொம்ப அபூர்வம். சாவித்திரி, பார்வதி இருவரும் அடிக்கடி லக்ஷிமியோடு போட்டி போடுகிறார்கள். மீனாக்ஷியும் கமலாவும் கதைகள் தங்களுக்குத் தான் ஏற்பட்டிருக்கின்றன என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பத்மா, கோம

ளம், ஜானகி, சீதா முதலியவர்கள் சமயம் வரும்போது நுழைந்து விடலாமென்று வாசற்படியில் காத்துக்கொண்டிருக்கிருர் கள். "பெயரில்லாமல்" தினசரி வாழ்க் கையைப்பற்றிய வீட்டுக் கதை எழுதி விடுவார்களோ என்று காமாக்ஷி கேட் கிருள்; அலமேலுவும் அதை ஆதரிக் கிருள்.

விஸ்வநாதன், ராமநாதன், கிட்டு, இவர் களுக்கிருக்கும் திமிர் சொல்ல முடியாது. பத்து கதைகளில் ஒன்பது தங்களுடை யது; பத்தாவதில் தங்களுக்கு உரிமை யுண்டு என்று திடமான எண்ணம் கொண் டிருக்கிருர்கள் அவர்கள். ராஜு, கோபா லன், முத்து, கணேசன் முதலியோர் தங் கள் பெயர்கள் கதைகளில் வராவிட்டால் மறியல் செய்வார்கள் போல் இருக்கிறது. குப்பனையும், பிச்சனையும் ஒவ்வொரு ஆசிரியரும் வருந்தி யழைக்கவேண்டி யிருக்கிறது. மணியனை இன்னெரு தடவை அழைத்தால் உண்ணு விரதம் ஆரம்பிப்பானே என்று பயமாயிருக் கிறது.

இந்த ஸ்திதியில் என்ன கதை வேண்டி யிருக்கிறது? இவர்களுடைய பெயர் களைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய் விட்டது. ஆனுல் இவர்களுடைய உதவியை நிராகரித்தால் புது தினுசான கதைகளே எழுதவேண்டும். அந்த மாதி ரிக் கதைகளில் இவர்கள் தப்பித்தவறி நுழைந்துவிட்டால் கூட ஜெர்மனியில் இருக்கும் யூதர்களைப் போல் அகப்பட்டுக் கொள்வார்கள்.

நமது கிராமங்களையும் வீடுகளையும் பற்றி எழுதினுல் தானே இவர்களுடைய உதவி வேண்டும். கதையின் பகைப்புலத் தையும் சம்பவங்களையும் மாற்றிவிட்டால் துப்பறியும் கதை எழுதுகிருேமென்று வைத்துக்கொள்வோம். இவர்கள் கிட்டெ வாமுடியுமா? "இன்ஸ்பெக்டர் சாந்த குமாரும், துப்பறி நிபுணன் உதயசிங்கும் மோட்டாரில் உட்கார்ந்து கொண்டிருந் தார்கள்" என்ருல் பொருத்தமாய்த் தான் இருக்கிறது. பிச்சாண்டி என்ற பெய ருடன் ஒரு துப்பறி நிபுணன் புறப்பட் டால் கொலேகாரன்கூடப் பயப்படமாட் டான்.

கலை விஷயமான கதைகளில் கிட்டுவுக் கும் காமாக்ஷிக்கும் இடம் கிடைக்குமா? ஆனந்த மோஹன்பானர்ஜி க்ஷிராதேவி யின் படத்தை வரைந்தான் என்ருல் நம்புவார்கள். ஸுகுமாரி வீணையில் மன முருகப் பாடினுள், விலாஸனி நாட்டிய மாடினுள் என்ருல் ஒருவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். அலமேலு வீணை வாசித்தா ளென்ருல் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒரு வேளை ஆர்மோனியம்தான் அவளுக் குக் கிடைக்கும். காமாக்ஷி பத்துத் தேய்க்கலாம். தண்ணீர் இறைக்கலாம். பரத நாட்டியம் ஆடமுடியுமா?

குப்புசாமி எழுதிய கவிதையை யாரும் படிக்கமாட்டார்கள். 'கலாபக்தன்' ராம் குமார் எழுதுவது எல்லாம் கவிதையாக இருக்கும்.

புதுப்பெயர்களை எடுத்துக்கொண்டால் பழைய கதைகள் எழுத முடியாது. "ஹேமலதை காட்டூரில் மாரியம்மன் கோவிலுக்குப் போய் மாவிளக்கு வைத் தாள்" என்று கதையை ஆரம்பித்தால் கட்டாயம் சிரிப்பார்கள். ஆசிரியருக்கு ஹேமலதையின்மேல் (பெயரில்) அவ் வளவு பிரியம் என்ருல் மரியாதையாக அவளை கல்கத்தாவிலேயே துர்க்கையின் சன்னதியில் புஷ்பத் தட்டுடன் சிருஷ் டிக்க வேண்டும். "மோஹன்ராவ் ஒரு காப்பிக் கிளப்பில் வேலை செய்துகொண் டிருந்தான்" என்ருல் அவனுக்குக் கோபம் வருவது நியாயம்தானே. அவனை டென்னிஸ் கிளப்பில் பார்க்கலாம். உங்க ளுடைய காப்பிக் கிளப்பில்தான் 'சேஷு' இருக்கிருனே.

"சோடாலால் படேசந்த் என்பவர் எங்களூரில் ஒரு கத்தரிக்காய் வியாபாரி" என்று எழுதிய ஆசிரியர்மீது வியாபாரச் சங்கம் கண்டனத்தீர்மானம் நிறை வேற்றினுல் அதிலென்ன ஆச்சரியம்? அவர் காய்கறிக் கடை வைத்துவிட்டால் வைரங்களையும் நகைகளையும், பட்டுத் துணிகளையும் விற்பது யார்? "ஸ்ரீமதி டாக்டர் சாரளா முரளீதர் அரசமரப் பிர தக்ஷணத்திற்கு மஞ்சள் கிழங்கு போட் டாள்" என்று எவ்வளவு பெயர் வாங்கிய ஆசிரியரும் தைரியமாய்க் கதை எழுத முடியாது. அந்தப் பெண்மணியை பீச்

சில் உலாவவைப்பது அல்லது மாதர் சங்கத்திற்குத் தலைவி யாக்குவது— இந்த இரண்டில் ஒன்றைச் செய்தால் தான் கதை பிழைக்கும்.

நமக்குக் கிடைத்திருக்கும் சில பெயர் களுக்குள்ளேயே எவ்வளவு வகுப்பு வாதம் எவ்வளவு போட்டி! 'கேதாரி— ஒரு உழவன்' என்று நாவலுக்குப் பெயர் கொடுத்திருந்தால் ஸ்ரீ வேங்கடரமணி படும்பாடு தெரியும். உழுவது முருகன் பிறப்புரிமை. 'இருளன்—ஒரு வக்கீல்' என்றால் நாவலை யார் படிப்பார்கள்?

பெயரில் என்ன இருக்கிறது என்று ஒரு ஆங்கிலக் கவி கேட்டாராம். ஒன்று மில்லை. கஷ்டம்தான் நிறைய இருக்கிறது. ஒன்று நிச்சயம். பழைய பெயர்களை உப யோகிப்பதில்லை என்று நிச்சயித்து விட் டேன். கதை மாத்திரம் நம்ம கதை யாகவே வருகிறது.

பெயர்கள் இல்லாமலே அவள் போனாள், அவன் வந்தான் என்று எழுத ஆரம்பித்தேன். மூன்று பக்கங்கள் முடி வதற்குள் நான்கு வெவ்வேறு 'அவள்' மூன்று 'அவன்'களும் சேர்ந்து ஒருவருக் கொருவர் அடையாளம் தெரியாமல் கதை யைக் குட்டிச்சுவ ராக்குகிறார்கள். எந்த 'அவள்' கதாநாயகி என்று கண்டுபிடிப்ப தற்குள் என்பாடு ரொம்பக் கஷ்டமாய் விட்டது.

நாவல்களைப் படித்துப் படித்துப் புதுப் பெயர்கள் எவ்வளவோ எனக்குத் தெரிந் திருக்கின்றன. அவைகளுக்கு நம் வாழ்க்கையைப் பற்றிய கதைகள் பொருத்தமாயில்லை. ஆனால் புதுக் கதை களோ கற்பனைக் கெட்டமாட்டேன் என்கின்றன.

நல்லவேளை. இப்பொழுதுதான் ஒரு யோசனை உதித்தது. ஒரு வங்காளிக் கதையை மொழிபெயர்த்து அனுப்பி விடுகிறேன். எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும். வங்காளக் கதையை மொழி பெயர்ப்பதனால் இலக்கிய அந்தஸ்தும் கிடைக்கும்!

———

கசின் அண்டு கம்பெனி

(COUSIN & CO.)

உயர்தர மரச்சாமான்கள் தயார் செய்பவர்கள்

ஆபீஸ்களுக்கும், பாங்கிகளுக்கும்,
ஆஸ்பத்திரிகளுக்கும், வீடுகளுக்கும்

வேண்டிய எல்லா நவீன உயர்தர மரச்சாமான்கள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.

இதர இடங்களுக்குச் செல்லுமுன் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து பாருங்கள்!

சாமான்கள் வாங்குமுன் எங்களை கலந்துகொள்ளுவது நலம்
எங்கள் கம்பெனி "பர்னிசர்கள்" உங்களுக்குப் பூர்ண திருப்தி அளிக்கும்.

ஆபீஸ், கம்பெனி பார்வையிடம்:-

17-18, பிராட்வே,
ஜி.டி., சென்னை.

ரேடியோ கச்சேரி

[ஸ்ரீ. வி. முத்துஸ்வாமி பி. ஏ.]

சங்கீதப் பித்துப்பிடித்த என்னைப் போன்றவர்கள் அகில இந்திய ரேடியோ ஸ்தாபன நிர்வாகஸ்தர்களுக்குத் தங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்த பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் பொறுக்கி எடுத்த பிரபல வித்வான்களிலிருந்து, ஊர் பேர் தெரியாத அமெச்சூர்கள்வரை பாடிக் கேட்டு அனுபவிப்பதற்கு நமக்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறதல்லவா?

நிற்க, உயர்தர ரேடியோக் கச்சேரிகளை நாம் கேட்டு அனுபவிக்க வேண்டுமென்றால், ஒன்று நம்மிடமாவது சொந்த ஸெட் இருக்கவேண்டும்; அல்லது ரேடியோ ஸெட் வாங்கி இருக்கும் நமது நண்பர்களுக்காவது சங்கீத ஞானம் இருக்க வேண்டும்.

நான் ரேடியோ ஸெட் வாங்கி வைத்துக்கொள்ளவில்லை என்பதுதான் உங்களுக்கு நன்றாகத் தெரியுமே! என் பக்கத்து வீட்டுக்காரருக்காவது சங்கீத ஞானத்தை ஈச்வரன் கொடுத்திருக்கக் கூடாதா? இரண்டு மில்லை என்றால் போகும் வழிதான் என்ன?

என் பக்கத்து வீட்டுக்காரரிடம் புதிய ரேடியோ ஸெட் ஒன்று இருக்கிறது. ஆனால் அவரைப்போல் ஞான சூன்யரை இவ் உலகில் கண்டுபிடிப்பது எளிதான காரியமல்ல. தியாகய்யர் வாளுக்கு பத்து நாள் தாயாதி! ஸூஸ் சங்கீதம் இருக்கும் இடத்தில் கூட அவர் இருக்க மாட்டார். என்ன ஸார் அநியாயம்! அன்று மாலை பிரபல பாடகர் ஒருவர் ரேடியோவில் 'அமீர் கல்யாணி'யை சாராகப் பிழிந்து கொண்டிருந்தார். என்னுடைய துரதிர்ஷ்டம் என் நண்பர் குப்பென்று ரேடியோவை மூடிவிட்டு "வண்ணான் வந்தானே" "கதவைத் திறவாய்" என்ற ரிகார்டுகளை கிராமபோனில் போட்டுவிட்டு தன் கண்களிரண்டையும் மூடியவண்ணம், அனுபவித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார். எனக்கு இரும்புக் காதுகளாயிருந்தாலுங் கூட இந்தக் கடூரத்தைச் சகிக்கமுடியாது.

எவ்வளவு நாள் தான் உயர்தரக் கச்சேரிகளை நான் கேட்காமலிருக்க முடியும்? இந்த இழவை உத்தேசித்துத்தான் ஒரு ரேடியோ ஸெட் வாங்கிவிடுவதென தீர்மானித்தேன். அதில் நம்மிஷ்டப்படி விச்ராந்தியாக கேழ்க்கலாமல்லவா?

என்னுடைய தீர்மானத்தைப்பற்றி சில நண்பர்களிடமும் பிரஸ்தாபித்திருந்தேன். என் தீர்மானம் சிறு அலையின் மூலமாக ரேடியோ ஏஜண்டுகளுக்கு எட்டிவிட்டது போலும்! அவ்வளவுதான் ஒரு நாள் காலை நான் காப்பி சாப்பிட்டுவிட்டுத் தாழ்வாரத்திற்கு வந்தபோது பெஞ்சியின் மேல் நான்கைந்து புதிய ரேடியோ ஸெட்டுகள் இருக்கக் கண்டேன். என் மனைவி ராஜத்தைக் கூப்பிட்டு "ராஜம், இதோ பாரத்தையா! எவ்வளவு ரேடியோ ஸெட்டுகள்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், புத்திலிருந்து ஈசல் கிளம்புவதுபோல, ஸூட்டும், ஹாட்டும் போட்டுக்கொண்ட ரேடியோ ஏஜண்டுகள் எனக்கு வந்தனம் செய்துவிட்டு, தங்கள் தங்கள் ரேடியோ ஸெட்டின் விசேஷ அம்சங்களைப்பற்றிச் சிலாகித்துச் சொன்னார்கள். இதற்கெல்லாம் நானா மயங்குகிறவன்! அவர்களை வெள்ளிக்கிழமை காலை என்னை வந்து பார்க்கும்படி சொல்லிவிட்டு ஒவ்வொரு ஸெட்டாக வைத்துப் பரீக்ஷை பார்த்தேன். முடிவில் ஒரு ஸெட் மாத்திரம் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. என் மனைவிக்கே அது பிடித்திருக்கும் போது கேட்பானேன்! அந்த ஸெட்டிற்கு விலையைப் பேசி முன் பணமாக ஐம்பது ரூபாய் கொடுத்துவிட்டு கமிஷன்போக பாக்கித் தொகையை "இன்ஸ்டால்மெண்டில்" கட்டுவதாக ஏஜண்டினிடம் உறுதி கூறினேன். மற்ற ஸெட்டுகளை அந்தந்த ஏஜண்டுகள் எடுத்துப் போய்விட்டனர்.

பகல் போஜனத்தை முடித்துக்கொண்டு நானும் என் நண்பன் ராமுவும் ‘ஏறியல்’ கட்டும் வேலையை ஆரம்பித்தோம். இரவு எட்டுமணிக்கு ஒரு பேர்போன பாடகர் அல்லவோ பாடப் போகிறார். அதனால் வேலையும் ஜரூராக நடந்தது. சரியாக மாலை ஐந்துமணிக்கு ஏறியலும் கட்டியாகி விட்டது. என் நண்பன் வீட்டிற்குப் போனபிறகு வாயிற் கதவை தாளிட்டு விட்டு, நான் என் மனைவி குழந்தைக ளோடு, ரேடியோவில் ஒரு அமெச்சூர் பாடகரின் பாட்டைக்கேட்டு ஆனந்தித் தோம்.

மணி ஏழேமுக்கால் ஆகிவிட்டது. நான் ரேடியோ ஸெட் புதிதாக வாங்கி இருப்பது எப்படியோ நண்பர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவ்வளவுதான்! கூட் டம் கூட்டமாக நண்பர்கள் வர ஆரம் பித்துவிட்டனர். பெரிய பாடகர் கச்சேரி யல்லவா ? அதான் அவ்வளவு கூட்டம்.

சரியாக மணி எட்டு ஆன உடன் பாட கர் நாட்டை ராகத்தை ஒரு தரம் அலசி விட்டு “ஸரஸீருகா,” என்ற கீர்த்தனை யைப் பாடினார். அதனுடைய அருமை எனக்கல்லவோ தெரியும்! நான் இரண்டு நிமிஷம் அப்படியே சங்கீதத்தில் ஆழ்ந்து விட்டேன். ஆனால் ஸூஸ் சங்கீதத்திற்கு இடைஞ்சல்கள் இல்லாமலிருக்குமா? வந் திருந்த நண்பர்களும் தங்கள் கச்சேரியை ஆரம்பித்துவிட்டனர். அவர்களை “பேசாம லிருங்கள்” என்று நான் சொல்வது மரி யாதையா ? அவர்களுக்கல்லவோ தெரிய வேண்டும் இங்கிதம். பேச்சு பலக்க ஆரம் பித்தது. அதன் சாராம்சத்தை கீழே தருகிறேன்.

“ஏன் ஸார், “ஏறியல்” மேல்மாடிலே தானே ? பர்மெனண்டா ? ”

“லிஸ்டு பிரைஸ் என்ன ஸார் ஆகி றது ? கமிஷன் உண்டோல்லியோ ? ”

“டோன்குவாலிடி எப்படி இருக்கு. ஸெட் “நீட்டா” இருக்கு ஸார்;

“அது ஒண்ணுமில்லே. அலைன் மெண்ட் மிஸ்டெக்கா இருக்கும்.

“ஷார்ட் வேவ், கிளியரா இருக்கா ? ”

“நாலு வால்வா, ஆறுவால்வா ஸார் ? ”

“பாம்பெ, பி. பி. ஸி. எல்லாம் வரதா ? ”

“ஏன் ஸார், கொலம்புதான் ரொம்ப ‘பவர்புல்’ ஸ்டேஷனுமே.”

“இன்னிக்கு ஏது ஸார், ஸ்கூல் புரோ கிறும் ? ”

“ஏன் ஸார், இப்ப இந்த ஸெட்டை முன்னூறு ரூபாய் கொடுத்து வாங்கி இருக்கேளே, அடுத்தாப்லே திருச்சி ஸ்டேஷன் வந்தூட்டுதுன்னு அப்ப என்ன பண்ரது? வேறெதான் வாங் கணுமோ ? ”

“ஆமாம், சரியா அஞ்சுன்னு,அஞ்சுக்கு ஆரம்பிச்சுடுவனு ஸார். அது எங்கே? எல்லாம் “இண்டியன் பங்க்ச்வாலிடி” தான் !

“லோகல் டிஸ்டர்பென்ஸோ. ச ரி தான்.”

நண்பர்கள் இப்படியே மூச்சுவிடாமல் பேசிக்கொண்டிருந்தனர். ஒரு மூலையில் என் குழந்தை தனம் அழும் சப்தம். அதைச் சமாதானப்படுத்த முயலும் என் மனைவியின் இரட்டிப்பு சப்தம் ஒருபுறம். இந்த பிரதி பந்தகங்களுக்கிடையே சங் கீதத்தை நான் எப்படிக் கேட்டு ரஸிப் பது. மணியும் ஆகிவிட்டது. “பாடகர்” “பவமான” என்று ஆரம்பித்தார். அப் பொழுதுதான் ஒரு நண்பர் கண்களைத் துடைத்துக் கொண்டு “கச்சேரி க்ளோஸோ!” என்றார். எனக்கு வந்த ஆத்திரத்துக்கு கங்கு கரையே கிடை யாது. என்ன செய்கிறது? பிறரைப் பற்றி நம் மனதில் தோன்றியவைகளை யெல்லாம் சொல்லிவிட முடிகிறதா ? ஆத் திரத்தை ஒருவாறு அடக்கிக்கொண் டேன். வெற்றிலை சீவல் புகையிலைப் பிரியர்கள் என் நண்பர் கோஷ்டியில் அதி கம். அவர்களுக்குத் தாம்பூலாதிகள் சமர்ப் பித்து வீட்டுக்கு அனுப்பினேன். எப் படி ஸார் நான் கச்சேரி கேட்டு குட்டிச் சுவராய்ப்போனது ?

அதிலிருந்து ஒரு மாதமாக என் ரேடியோ ஸெட்டை பூட்டிவைத்து விட் டேன். என் பக்கத்துவீட்டுக்காரரிடம் கெஞ்சிக் கூத்தாடி, நல்ல புரோகிறும் நடக்கும்போது வைக்கச் சொல்லிக்கேட்டு ஆனந்தப்படுகிறேன்.என் புதிய ரேடியோ ஸெட்டிற்கு ஏதாவது கிறுக்கி இருந்தால் உடனே தெரிவியுங்கள் !

கனவா?—நனவா?

(ஸ்ரீ. பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்.)

பணவூர் ஓர் அழகிய சிறு கிராமம். அதன் வடக்கே பாலாறு ஓடுகிறது. பாலாறுஜீவநதியல்ல. வருஷத்தில் குறைந்தது ஒன்பது மாதம் வெறும் பாலைவனம் போலிருக்கும். தெற்கேயும் கிழக்கேயும் கண்ணுக் கெட்டின தூரமெல்லாம் பரந்து கிடக்கும் பச்சைப் பசேலென்ற நெற்கழனிகள். மேற்கே கொஞ்ச தூரம் நஞ்சை நிலங்கள். பிறகு பாலாற்றினின்றும் நெடுக வெட்டப்பட்ட ஒரு கால்வாய். அதற்கப்பால் பொழில்கள், மேய்ச்சல் காடு, ஏரி, இவைகளுக்கெல்லாம் பின்னணியாகக் கம்பீரமாக நிற்பது ஒரு மலைத் தொடர்ச்சி. சுற்றியுள்ள கிராமங்களெல்லாம் 'சேரி' எனும் அடைச் சொல்லுடன் நீர் வளமும் நில வளமும் வனப்புமுடைய இக் கிராமமொன்றே 'ஊர்' என்றழைக்கப்படும் பெருமை வாய்ந்தது. இவ் வூருக்கு வெளியே அரை மைல் தூரத்திலுள்ள பிரம்மேஸ்வரன் கோயிலைச் சுற்றியுள்ள பரந்த மைதானத்தில்தான் பிரம்மாவும் ஈசுவரனும் சேர்ந்து யாகம் செய்ததாக ஸ்தல புராணம் கூறுகிறது.

இவ்வூரில் எனது மூதாதையர் தலைமுறை தலைமுறையாக கிராம முனுசீபு வேலை பார்த்து வந்தனர். ஊரின் பெரும் பகுதியான நஞ்சை புஞ்சைகளும், தோட்டம் துரவுகளும் அவர்களுக்கே சொந்தம். அவர்களது குலத் தோன்றல்களான தாசில் வெங்கடராமய்யரையும், அரிசி மண்டி சிவராம கிருஷ்ணய்யரையும் அந்தப் பிராந்தியங்களில் அறியாதாரில்லை. நாளடைவில் எங்களது குடும்பத்தினர் எல்லோரும் பாகம் செய்து பிரிந்து நீர் நிலங்களை விற்றுப் பட்டணத்தில் குடிபுகுந்து பற்பல தொழில்களிலும் வியாபாரங்களிலும் ஈடுபட்டனர். எனது தகப்பனார் பிதுரார்ஜிதமாகக் கிடைத்த, முப்போகங்கள் தந்த செழிப்பான பூமிகளையெல்லாம் அடகு வைத்து, அச்சாபீஸ் வைத்து அதில் நஷ்டமடைந்து பூஸ்திதியையெல்லாம் இழந்தார். எனது சிறிய தகப்பனருக்கு மட்டும் சில காணிகள் நிலமும் ஒரு கூரை வீடும் மிகுதியாக நின்றன. சிறுவயதிலிருந்து பட்டணத்திலேயே படித்துவந்த நானும் எனது ஒன்றுவிட்ட தமையன் தம்பிமார்களும் கோடைகால விடுமுறை நாட்களில் கிராமத்திற்குச் சென்று, காலையில் ஆறு, ஏரி, குளம், துறவுகளில் நீச்சலடித்துத் திளைத்தும், மாலையில் ஊரிலுள்ள காடு மேடுகளில் திரிந்தும், வேலியைத் தாண்டி மாந்தோப்புகளைச் சூறையடித்தும், பனங்காட்டில் மரமேறி நொங்கு வெட்டிச் சாப்பிட்டும், மலையின் மீதேறியும் உல்லாசமாகக் காலங் கழித்து வருவோம். தினந்தோறும் ஊர் மாடுகள் மந்தைக் கரையில் மேய்ந்துவிட்டு கும்பல் கும்பலாக கழுத்தில் வெண்கல மணி ஒலிக்க ஒய்யாரமாகத் திரும்பி வரும் போதுதான் நாங்களும் கூட்டமாக ஈசலடித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் வீடுவந்து சேருவோம்.

நான் என் ஊரைப் பார்த்துப் பதினைந்து வருஷங்களாகின்றன. இப் பதினைந்து வருஷங்களுக்குள் ஊர் எவ்வளவோ மாறுதலடைந்திருக்கலாம். கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றி பேசி வரும் இந்நாட்களில் கிராமங்களைப் பற்றி நினைக்காமலிருக்க முடியுமா? ஒரு நாள் 'பாரதமணி'யைச் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டே படித்தவண்ணமாயிருந்தேன். எனது ஊரின் இயற்கைச் செல்வங்களும் இனிய வாழ்க்கையும் படமெடுத்தாற்போல் என் மனத்திரையில் வந்தன. பழைய நினைவுகள் குமுறிக்கொண்டு வந்தன. உணர்ச்சி பொங்கியது. ஒருதரமாவது ஊரைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற எண்

ணம் உதித்தது தான் தாமதம், உடனே எழும்பூர் சென்று ரயிலிலேறிக் கொண்டேன். ஒரு நொடியில் செங்கற் பட்டை யடைந்து, வண்டி மாறி பாலூர் ஸ்டேஷனை யடைந்தேன். பாலூரில் இறங்கி பாலாற்றின் மணலை வேகமாகத் தாண்டி என் ஊரின் எல்லையை யடைந்தேன்.

கிராம எல்லைக்கு வெளியே ஹரிஜனச் சேரி முன்போலவே இருக்கக்கண்டேன். ஆயினும் முன்னிருந்ததைவிட அது கொஞ்சம் சுத்தமாகவும் நாகரீகமாகவும் காணப்பட்டது. புறம்போக்கைக் கடந்து சென்றேன். வழிநெடுக பனி முத்துக்களைத் தாங்கிய பசும் புற்கள் காலை இளம் வெயிலில் நானாவித வர்ணங்களுடன் ஜொலித்தன. கோழியின் கொக்கரிப்பு தூரத்திலிருந்து கேட்டது.

பள்ளித்தெருவில் நுழைந்ததும் ஒரு புதிய கோயில் என் முன் நிற்கக்கண்டேன். முன்னே இதே இடத்தில்தான் பாழடைந்து நாகதாளிப் புதரால் சூழப்பட்டிருந்த கைலாச நாதர் கோயிலிருந்தது. வழியில் தற்செயலாகச் சென்றுகொண்டிருந்த ஒரு குடியானவனை இப்புதிய கோயிலைப்பற்றி விசாரித்தேன். சென்னையில் பிரபல கிரிமினல் லாயரான ராஜகோபாலய்யர் தனது சொந்தச் செலவில் இக்கோயிலைப் பண்படுத்தி, குளம் வெட்டி, பூஞ்சோலை வைத்து, வருஷா வருஷம் வசந்தத்தில் பத்துநாள் உச்சவம் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறாரென்றும், ஐந்து வருஷங்களுக்கு முன்தான் இதற்குக் கும்பாவிஷேகம் ஏகத் தடபுடலாக நடந்ததென்றும் அறிந்தேன். பள்ளித் தெருவின் வழியாக இருபுறமும் நிதானமாகப் பார்த்துக் கொண்டே சென்றேன். பல வீடுகள் முன்போலவே பனங்கீற்றுக் கூரைபோட்ட மண் குடிசைகளாகவே இருந்த போதிலும், நடு நடுவே பக்கா செங்கற் கட்டிடங்களும் காணப்பட்டன. எல்லா வீட்டு வாசல்களும் பெருக்கப்பட்டுச் சாணி நீர்தெளிக்கப்பட்டு, அரிசி மாவினால் முத்து முத்தாக வரையப்பட்டு பல ரக கோலங்களுடன் பளபளவென்று பிரகாசித்தன. வீட்டுக் கொல்லைகளிலிருந்து தெருப்புறமாக நீட்டிக்கொண்டிருந்த மரங்களிலும் செடிகளிலும் இதழ் விரித்து இளஞ் சூரியனை நோக்கிச் சிரித்த பிள்ளையார்ப்பூ, பாதிரிப்பூ, முருங்கைப்பூ, செம்பருத்திப்பூ, மருதாணிப்பூ, பூவரசு, மல்லிகை, முதல் முதலிய மலர்கள் கிளைகளில் ஊசலாடிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு வீட்டின் புறக்கடையிலும் போராகப் போட்டிருந்த மணம் வீசும் புது வைக்கோல் தென்பட்டது.

ஒரு குடியானவன் ஏர், கலப்பைகளைத் தோளில் தாங்கி உழவு மாடுகளுடன் வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். ஒரு பையன் வீடு வீடாகச் சென்று மாடுகளை மந்தைக் கரைக்கு ஓட்டிச் சென்றுகொண்டிருந்தான். ஒரு மாட்டுக் கொட்டிலில் ஒரு எருமை தலைநிமிர்ந்து சிந்தனையிலாழ்ந்திருந்தது. மற்றொன்று உண்ணியின் கடி பொறுக்காமல் காதுகளைப் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. ஒரு பசு தனது கன்றின் தேகமெல்லாம் நக்கிக்கொண்டிருந்தது. அக் கொட்டிலில் மாட்டுக்காரப் பையன் நுழையவே, எல்லாம் தயாராக எழுந்து நின்றன. உடனே அவன் தாம்புகளை அவிழ்த்து அவைகளையும் ஓட்டிச் சென்றான். ஒரு வீட்டின் இரேழியில் இரு ஸ்திரீகள், உலக்கை மாறிமாறி கீழும் மேலுமாகத் தள்ள, உரலில் நெல் குத்திக்கொண்டிருந்தனர். ஒரு வீட்டின் வாயிற் புறத்தில் ஒருவன் வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, புகையிலை, புளி, உப்பு, மிளகாய், வெல்லம், முதலிய பல சரக்குகளை விற்பனை செய்துகொண்டிருந்தான். சில வீடுகளின் எதிரே உலர்த்தப்படுவதற்காக நெல் அம்பாரமாகக் குவிக்கப்பட்டிருந்தது. ஒரு சிறு குடிசையின் திண்ணையில் ஒரு கிழவி ராட்டையில் நூற்றுக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு சிறுமி நூற்கப்பட்ட நூல்களைச் சிட்டமாகப் போட்டுக்கொண்டிருந்தாள். எதிரே தெரு வாசலில் இருவர் பாவை விரித்து கஞ்சி வைத்துக்கொண்டிருந்தனர். குடிசையிலுள்ளே ரேழியில் ஒருவன் தயாரான பாவைத் தறியிற் கோர்த்து, நூல்கண்டு ஒன்றை எடுத்துக் குழலில் புகுத்தி மிதியை மாறிமாறி

அழுத்தி ஊடு நெய்து கொண்டிருந்தான். அடுத்த வீட்டில் ஒருவன் பருத்தி மணையில் அரைத்துக் கொண்டும் மற்றொருவன் வில்லில் பஞ்சைக் கொட்டி, பிறகு அதைப் பட்டைபோட்டுக்கொண்டுமிருந்தான். இக்காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டே அக்கிரகாரம் சேர்ந்தேன்.

அது சமயம் அக்கிரகாரத்து ஸ்திரீகள் சிறு சிறு கும்பலாக அக்குளில் குடத்தை வைத்துக்கொண்டும் தோளில் பழந் துணிகளைப் போட்டுக்கொண்டும் கால்வாயில் நீராடிவிட்டுக் குடிநீர் கொண்டு வருவதற்காகச் சென்று கொண்டிருந்தனர். என்னைக் கண்ட சிலர் சற்று நின்று உற்றுப் பார்த்துவிட்டு வியப்புடன் ஏதேதோ தங்களுக்குள் பேசிக் கொண்டனர். ஊர்ச்சிறுர்கள் என்னை நோக்கிய வண்ணமாக அவர்களுடைய வீட்டுக்கெதிரே நின்று கொண்டிருந்தனர். எனது சிறிய தகப்பனர் வீட்டை யடைந்தேன்.

அது பூட்டிக் கிடந்தது. ஒரு பாகத்தில் சுவர் இடிந்தும், கூரை ஓடுகள் பல உடைந்து விழுந்தும் பாழாய்க் கிடந்தது. அதற்குள் என்னைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்ட சிறுவர்களுள் ஒருவனை அவ்வீட்டைப் பற்றியும் என் சித்தப்பாவின் குடும்பத்தைப் பற்றியும் விசாரித்தேன். எனது சித்தப்பா அவ்வூர் பக்கம் திரும்பி ஐந்து வருஷங்களுக்கு மேலாய் விட்டதென்றும் அங்கு யாரும் வருவதில்லையென்றும் அவனிடமிருந்து கேள்விப்பட்டேன். அடுத்த வீடு புதிதாகக் கட்டப்பட்ட மெத்தை வீடாயிருந்தது. அது யாருடையதென விசாரித்தேன். அதுதான் பென்ஷனுடன் வேலையிலிருந்து விலகிக்கொண்ட டிபுடி கலெக்டர் சுப்பராமய்யரின் வீடென்றும், அவர் இவ்வூரில் நீர் நிலங்களை வாங்கிக்கொண்டு இங்கேயே சுகவாசம் செய்து வருகிருரென்றும், அவர்தான் இவ்வூரில் காங்கிரஸ் சபையை யமைத்து, விவசாயம், கைத்தொழில், கதர், நூல்நூற்றல், ஊர் பஞ்சாயத்து, முதலிய விஷயங்களில் ஊக்கமாக வேலை செய்து ஊருக்கு ஒரு புத்துயிரளித்து வருகிருரென்றும் அறிந்தேன்.

அவரது வீட்டில் நுழைந்து அவரைக் கண்டு பேசினேன். ஊரின் நிலைமையைப்பற்றி எல்லாம் எனக்கு விவரமாகச் சொன்னர். எல்லா ஜாதியாரும் சேர்ந்த எண்பது அங்கத்தினர்கள் கொண்ட காங்கிரஸ் சபையொன்றிருக்கிறதாம். அக்கிரகாரத்தில் 25 ராட்டைகளும், பள்ளித் தெருவில் 30 ராட்டைகளும், ஹரிஜன சேரியில் 15 ராட்டைகளும் ஓடுகின்றனவாம். வைதிகப் பிராம்மணர்கள் தக்ளியில் நூற்கின்றனராம். தமது வீட்டிலேயே ஒரு பொது வாசகசாலையிருக்கிறதாம். அதில் 'தினமணி,' 'ஹிந்துஸ்தான்,' 'மணிக்கொடி,' 'பாரதமணி' இந்நான்கு பத்திரிகைகளும் வருகின்றனவாம். அன்றையதினம் அவர் வீட்டிலேயே தங்கி போஜனம் செய்ய வேண்டுமென்றும் என்னைக் கேட்டுக் கொண்டார். அதற்கு நான் இணங்கினேன்.

பிறகு அக்கிரகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வருகையில் ஒரு வீட்டுத் திண்ணையின் மீது உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு கிழவி என்னை உற்றுப் பார்த்துவிட்டு "நீயாரப்பா, ஊருக்குப் புதிசா யிருக்கிறதே?" என்று கேட்டாள். நான் இன்னுரென்று அறிவித்து, அவள்தான் காமுப்பாட்டி என்பதையும் அறியலானேன். பல வருஷங்களுக்கு முன் விதவையான காமுப்பாட்டி எனது சிறிய தகப்பனரின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் தனது சிறுபெண் சம்பூரணத்துடனும் கணேச சாஸ்திரிகளுடன் வேதாத்தியயனம் பண்ணிக்கொண்டிருந்த ஜானகிராமன் என்னும் பிள்ளையுடனும் வசித்துவந்தாள். அவள் எங்களது வீட்டுக்கு அடிக்கடி வருவாள். எங்களது வீட்டைப் பார்த்துவந்த விதவை அத்தைக்கு அவள் ரொம்ப சிநேகம். அவள் அரைமணி நேரம் விடாமல் என்னைப் பல கேள்விகள் கேட்டாள். நான் விடை பெற்றுச் செல்லுகையில் அன்றையதினம் அவளது வீட்டில் போஜனம் செய்யும்படி கேட்டாள். சுப்புராமய்யர் வீட்டில் முன்னமேயே ஏற்பாடாய் விட்டதென்றும் அடுத்த நாள் கட்டாயம் வருவதாகவும் சொன்னேன். "கட்டாயம் வர வேண்டும் உன்னை நான் எதிர்பார்க்கிறேன். எனது மாப்பிள்ளை செங்கற்பட்டுக்கு உபநயனம் செய்துவைக்கப் போயிருக்கிருன். உன்னுடன் நாளை சாவகாச

மாய்ப் பேசுகிறேன்" என்றாள். பிறகு ஊர்க்கோடியிலுள்ள பிள்ளையார் கோயிலைத்தாண்டி களமோடு வழியாகச் சென்றேன். அங்கு அரசமரத்தடியில் வாரத்திற்குப் பயிர்செய்த சில குடியானவர்கள் அறுவடையான நெற்பயிர்களை மாடுகட்டி அடித்துக்கொண்டும், சிலர் உதிர்ந்த நெல்லைக் குவித்தும், வைக்கோலைப் போரிட்டுக் கொண்டுமிருந்தனர். ஒரு மிராசுதாரர் கங்காணம் செய்து கொண்டிருந்தார். களமோட்டைத் தாண்டி வயல் வரப்புகளின் வழியாகச் சென்று கால்வாயை அடைந்தேன். கால்வாயில் துணி துவைத்து நன்றாக நீராடி விட்டு திருநீரைக் குழைத்து நெற்றியிலிட்டுக் கொண்டு சுப்புராமய்யர் வீட்டுக்குத் திரும்பினேன்.

போஜனம் முடிந்து சற்று உறங்கிய பின், என்னுடன் இதற்குள் பழகி விட்ட சில சிறுவர்களுடன் பிரம்மேஸ்வரன் கோயில், மாந்தோப்புகள், தண்ணீர் நிரம்பி அலைமோதிக் கொண்டிருந்த ஏரி, இவைகளையெல்லாம் பார்வையிட்டு விட்டு மலையின் மீதேறிச் சென்றோம். மலையின் உச்சியில் ஒரு எலுமிச்சைச் செடியின் கீழ் பிரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணு பாதங்களைத் தரிசித்து அங்கேயே மௌனமாகப் பத்து நிமிஷங்கள் தியானம் செய்து விட்டு, அஸ்தமன சூரியனின் ஜாலங்களைக் கண்டு களித்துக்கொண்டே வீடு திரும்பினோம். சீக்கிரமாக போஜனத்தை முடித்துக்கொண்டு பிள்ளையார் கோயிலின் ஆலமரத்தடியில் நில வொளியில் கூடியிருந்த கிராமப் பொதுமக்களுக்கு உலக நிலைமை, நாட்டு வளப்பம், சுயராஜ்யம், காங்கிரஸ் ஆட்சி, தீண்டாமை, மதுவிலக்கு, கதர், உழவுத் தொழிலி லீடுபட்டுள்ள குடிகளுக்கும் மிராசுதாரர்களுக்கும் இருக்க வேண்டிய உறவு, கடன்பளு, விவசாயக் கடன் நிவாரணச்சட்டம், கிராமக் கல்வி, முதலிய விஷயங்களைப்பற்றி சாங்கோ பாங்கமாகப் பிரசங்கமாரி பொழிந்தேன்.

அடுத்தநாள் காலை முன்னே ஏற்பாடாயிருந்தபடி காமுப்பாட்டியின் வீட்டிற்குப் போஜனத்திற்காகச் சென்றேன். காமுப்பாட்டி தெருத்திண்ணையில் என்னை வரவேற்று பழைய குடும்ப விஷயங்களைப் பற்றி யெல்லாம் பேசினாள்; பன்னிரண்டுமணிக்கு போஜனத்திற்காக உள்ளே சென்றோம். அங்கே நான் யாரைக் கண்டேன் என்று நினைக்கிறீர்கள்? ஏன், சம்பூரணத்தைத்தான். முதலில் அடையாளம் தெரியவில்லை. பிறகு தெரிந்து கொண்டேன். பழைய ஞாபகங்களெல்லாம் வந்தன. நான் விடுமுறை நாட்களில் ஊருக்கு வந்தபோதெல்லாம், நாங்கள் இருவரும் நடுப்பகல் போஜனத்திற்குப் பிறகு தெருத்திண்ணையிலோ ரேழியிலோ உடகார்ந்துகொண்டு தாயம் விளையாடுவோம். அஸ்தமன சமயத்தில் இருவருமாகச் சேர்ந்து பிள்ளையார் கோவிலுக்காவது பிரம்மேச்வரன் கோவிலுக்காவது போவோம். கால்வாய்க்கு ஸ்நானம் செய்யப் போகையில் என்னைத் தவறாமல் கூப்பிட்டுக்கொண்டு போவாள். நான் எனது சிறிய தகப்பனாருடைய வயல்களில் அறுவடையாகும்போது கண்காணிப்பதற்காக அதிகாலையில் அனுப்பப்படுவது வழக்கம். அது சமயம் சம்பூர்ணம் தான் மத்தியான சாப்பாட்டை மூட்டைகட்டிக் கொண்டுவந்து எனக்கு வயலில் ஒருமரத்துநிழலில் இலைபோட்டுச் சாதம் போடுவாள். அறுவடையானபின் கைகோர்த்துக்கொண்டு தோப்புகள் வழியாகக் கதைகள் சொல்லிக்கொண்டே வீடு திரும்புவோம். சம்பூரணம் என்னை உற்றுப் பார்த்துவிட்டு இரண்டு நிமிஷமான பின் "என் மாமா ஞாபகமில்லையா?" என்றாள். "நன்றாயிருக்கிறது. ஞாபகமில்லாமலென்ன? ஆனால் பல வருஷங்களாய் விட்டபடியால் சட்டென்று கண்டுபிடிக்க முடியவில்லை" என்றேன்.

"நாம் இருவரும் சேர்ந்து தாயம் விளையாடினது நினைவிலிருக்கிறதா? எனக்குப் பத்து வயசு அப்பொழுது. உனக்கு பதினைந்துவயசா?" "ஆகா, நினைவிருக்கிறது. தாயம் விளையாடும்போது நாம் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்ளுவோமல்லவா? ஒரு நாள் கோபித்துக்கொண்டு உன் கன்னத்தில் பளால் என்று அறைந்தேன். நீ அழுதுகொண்டே உன் அம்மாவிடம் சென்று புகார் செய்தாய்" என்று சிரித்துக்கொண்டு சொன்னேன்.

"ஒரு நாள் மாலை நாமெல்லோரும் பாலூர் பரிவேட்டையைப் பார்க்கச் சென்

திருந்தோமே, அப்போது திரும்பி வரு கையில் பாலாற்று மணலில் ஒரு நாகதாளி என் காலில் குத்தி நடக்க முடியாமல் தவிக்க, நீ என்னை உன் தோ ளில் ஏற்றிக்கொண்டு வீட்டில் கொண்டு வந்து விட்டாயே, ஞாபகத்திலிருக் கிறதா?''

"இருக்கிறது. ஒருநாள் எனது அத்தை தூரமாயிருந்தபோது நீ எங்களுக்குச் சமைத்துப் போட வந்ததும், சமை யல் செய்யும்போது, தாளித்துக்கொட்ட செம்பிலிருந்த எண்ணெயைக் கரண்டியில் வார்க்கையில் எண்ணெ தவறி அடுப்பில் விழ, குபீலென்று நெருப்பு கிளம்பி உன் முன் கூந்தலைக் கொளுத்தியதும், நான் உன்னைப் பின்னுக்காக இழுத்து சிஷ் ருஷை செய்து உனக்கு சமையலில் உதவி யதும் ஞாபகமிருக்கிறதா?''

"இருக்கிறது. எல்லாம் நேற்று நடந் ததைப் போலிருக்கிறது!''

இவ்வண்ணமாக, சாப்பிட்டுக்கொண்டே பழைய நினைவுகளைப் பற்றிப் பேசினோம். காமுப் பாட்டியும் கேட்டுக்கொண்டே இருந்தாள். "என்னமோ அப்பா, நீ நன்றாயிருக்கவேண்டும். நாங்கள் தான் கொடுத்து வைக்கவில்லை, எந்த பெண் உன் பொருட்டு அம்பாளைப் பூஜை செய் தாளோ அவளே உனக்குக் கிடைத்தாள். நான் சம்பூரணத்தை உனக்கே கலியாணம் செய்துகொடுக்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டேன். உன் அத்தையும் அதற்குச் சம்மதித்தாள். ஆனால் நாங்கள் ஏழைகளானதால், உன்னுடைய சித்தப்பா எங்களை உதாசினமாகப் பேசினன். பாவம், சம்பூரணம் உன்மேல் உயிராயிருந் தாள். உம்!'' என்று பெருமூச்சு விட் டாள் பாட்டி. என் எதிரே நின்றுகொண் டிருந்த சம்பூரணத்தின் கண்களிலிருந்து முத்துப் போன்ற நீர்த்துளிகள் கீழே விழுந்தன. முந்தாணையால் கண்களைத் துடைத்துக்கொண்டே சட்டென்று சமையலறையினுள் சென்றுவிட்டாள்.

யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட் டது. உடனே கண்களைத் திறந்தேன். நான் வேப்பேரி ஐரோட்டில் 12-ம் நம்பர் வீட்டு மாடியில் சாய்வு நாற்காலியில் சாய்ந் துக்கொண்டிருந்தேன். இது என்ன? கனவா? நனவா? நான் பணவூரில் காமுப் பாட்டியின் வீட்டிலல்லவோ சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். இது என்ன திடீ ரென்று சென்னைப்பட்டணம் போலிருக் கிறதே? எது நிஜம்? இரண்டு நிமிஷங் கள் எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனது சம்சாரம் லக்ஷ்மி என் முன்வந்து "ஏன், படுக்கையில் படுத்துக்கொண்டு தூங்கு கிறதுதானே? சாய்வு நாற்காலியில் தூங்கி விழுந்தா உடம்பெல்லாம் வலிக் குமே'' என்று சொன்னபோது விஷயம் விளங்கியது.

ஜெர்மனியின் வேதாந்தம்

யூதர்கள் போலந்திலிருந்தும் ரஷ்யாவி லிருந்தும் ஏழைகளாய் வந்து ஜெர்மனியில் குடியேறி பணக்காரர்களானர்கள். யூதர்கள் சிறந்த ஜாதியாரானலும் ஜெர்மனி அவர்களை வெளியேற்ற வேண்டுமென்பதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது யூதர்கள் பாங்குகள் பொருளாதாரம், நாகரீகம், அரசியல்—இவை களை கைக்குள் போட்டுக் கொண்டார்கள். அவர்கள் ஆசை பணத்தைத் திரட்டிக் கொண்டு அமெரிக்காவுக்கோ, அல்லது இங்கிலாந்துக்கோ போய்ச் சேர்ந்து விடுவது தான். ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்ததும் யூதர்களின் விலங்கிலிருந்து ஜெர்மனியை விடுவிக்கக் கருதினர். ஜெர்மனி யூதரை வெறுக்க மற்றொரு காரணம் என்ன வென்றால் அவர்களில் அநேகர் மார்க்விஸ்ட் (சமதர்மவாதிகள்) ஆக இருப்பதுதான். சென்ற ஐரோப்பிய யுத்தத்தின்போது யூதர் கள் பின்னாலிருந்து தேசத்தைக் குத்தினர் கள் என்பதையும், வறுமைக்குக் காரணமா யிருந்த தல்லாமல், வறுமையை வளர்க்கிறார் கள் என்பதையும் ஜெர்மானியர்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள். இப்போது ஜெர் மானியர்களான நாங்கள் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். இனி ஒரு க்ஷணமும் யூதர்கள் எங்கள் தேசத்தில் வைத் துக் கொண்டிருக்க முடியாது. நாஸிஸத் தையோ அல்லது வேறு ராஜீயக் கொள்கை யையோ எங்கேயும் ஏற்றுமதி செய்ய ஜெர் மனி விரும்பவில்லை. நாஸீஸம்தான் சிறந்த ராஜீய முறையென்றும் நாங்கள் சொல்ல வில்லை; அது எங்களுக்குத் தகுந்த சிறந்த முறை என்று தான் சொல்கிறோம்.

—பாரன்வான் டிரிங்லேஜ்

சுழலும் சக்கரம்

[ஸ்ரீ. ஸு. ஸேதுராமன்]

படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தான். வெகு நாழிகை வரையினும், தூக்கம் வரவில்லை. மனதில் நிமிஷத்துக்கொரு கோட்டை நிர்மாணமாகிக் கொண்டிருந்தது. பொழுது சீக்கிரத்தில் விடியவில்லையே என்று மனசு பறந்தது.

சாயந்திரம் 'அம்மாயி' எவ்வளவோ கெஞ்சியும் அவன் சோறு தின்னவில்லை. பசிக்கவே இல்லை அவனுக்கு. காற்றில் பறக்கும் பஞ்சைப் போலத் திசையறியாது மந்தகதியில் தள்ளாடிக் கொண்டிருந்த அவனுடைய மூளை, இன்று மிகவும் ஆதுரத்துடன் ஒரே விஷயத்தைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டுக் கிடந்தது.

"தம்பையா, நாளைக் காலையில் உன்னை ஐயா வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன். 'ஏதாவது வேலை வெட்டி கொடுத்து நீங்கதான் காப்பாத்தணும்' என்று அவர் காலில் உன்னை விட்டு விடுகிறேன்........." என்று அம்மாயி சொன்னது முதல்தான் தம்பையாவுக்கு மேற்சொன்ன அவஸ்தைகள்.

தம்பையாவுக்கு வயது பதின்மூன்று ஆகிறது. பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்தி இரண்டு வருஷங்களுக்குமேல் ஆயின. "நம்ம சாதிக்குப் படிப்பேதுக்கு?" என்ற அவன் தகப்பனுடைய வேதாந்தம் அவனிடமும் ஊறிப்போயிருந்தபடியால் பள்ளிக்கூடம் போவதில் இயற்கையாகவே அசட்டை ஏற்பட்டது. இரண்டாவது வகுப்புக்கு வந்ததும் உபாத்தியாயரிடம் சண்டை போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிட்டான்.

'அம்மணி' என்பது அவன் தாயாருக்கு இடப்பட்ட ச்ருதிஸுகமான பெயர். ஆனால் 'அம்மாயி' என்று தம்பையா குழந்தைப் பருவ முதல் கூப்பிட்டுவருகிறான். அப்பாவைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. வெகு நாட்கள் வரையில், சில பேருக்குத்தான் தகப்பனார் உண்டு, மற்றும் சில பேருக்கு 'அம்மா' மட்டுந்தான் உண்டு என்று நினைத்துக் கொண்டிருந்தது அவனுடைய வெள்ளை மனசு. விவரம் தெரிந்து கொள்ளக்கூடிய வயதானதும் தான், தன் தகப்பனார் ஒரு 'கள்ளச்'சியை இழுத்துக்கொண்டு ரங்கூனுக்கு ஓடிப்போய் விட்டார் என்ற விஷயம் அவனுக்குத் தெரியும்.

* * *

'எத்தனை நாட்களுக்குத் தான் வெட்டிப் பொழுது போக்குவது. நாமும் ஏதாவது வேலை செய்தால் 'அம்மாயி'க்குச் சௌகரியமாக இருக்குமே' என்று நினைத்தான். ஆனால் அம்மாயிக்குத் தன் பிள்ளையை, கிளிக்குஞ்சு என்று தான் பெருமைப்பட்டுவரும் குழந்தையை, கண்டவனிடமெல்லாம் வேலை செய்யச் சொல்ல இஷ்டமில்லை. எத்தனை காலந் தான் இம்மாதிரியே எண்ணிக் கொண்டிருக்க முடியும்?

அம்மாயி முன்சீப் வீட்டில் வீடு கூட்டும் வேலை செய்து வந்தாள். அடிக்கடி அவளைத் தேடிக்கொண்டு வரும் வியாஜத்துடன், ஐயா வீட்டில் ஏதாவது தின்னக் கிடைக்காதா என்று எதிர்பார்த்து வீட்டு ஆளோடியில் வந்து நிற்பான். "எங்க அம்மாயி இருக்குதா?" என்று கேட்டுக்கொண்டே, அவளிடம் போய் ரகஸியமாய் "ஏதாச்சிம் வாய்க்குப் போட்டுக் கொள்ள இருக்குதான்னு கேளு,.........இம்?" என்று சொல்லுவான்.

ஐயா வீட்டில் அம்மாயிக்கு நல்ல பெயர். எல்லோரும் அவளிடம் பிரியமாக இருந்தார்கள். நாட்களாக ஆகத் தம்பையாவுக்கும் தன் தாயாரைப் போலத் தானும் ஐயா வீட்டில் வேலை செய்து அவர் பெயரைச் சொல்லிக்

கொண்டு கஞ்சி காய்ச்சிக் குடிக்க வேண்டு மென்றும் தோன்ற ஆரம்பித்தது. அவளைத் தொந்தரவு செய்ய ஆரம்பித் தான். "ஐயாவிடம் சொல்கிறாயா அம் மாயி?........." என்று ஜாடையாகப் பல தடவைகள் சொல்வான். அவன் இப்படிக் கேட்கும்போதெல்லாம், அவள் பேச்சைமாற்றி வேறு ஏதாவது வழியில் மனசைத் திருப்பி விடுவாள்.

கடைசியில் அன்று சாயந்திரம்தான், இஷ்டப்பட்டோ இஷ்டப்படாமலோ, தம்பையாவை மறுநாள் காலை ஐயாவிடம் கூட்டிக்கொண்டு போய் விடுவதாக ஒப்புக்கொண்டாள்.

* * *

ராத்திரி எல்லாம் அவன் மனக்குகை யில் அமைதியே இல்லை. பல தினுசான கற்பனைகள். பரவச நிலையில் நிஷ்டை புரியும் தபஸ்வியைப் போல அவன் முகம் மலர்ந்து புன்னகைக் களையுடன் இருந்தது. தூக்கமே வரவில்லை. என் னென்னவோ யோசனைகள் செய்தான்.

'விடியற்காலையில் எழுந்திருந்து, நாட் டான் வாய்க்காலில் போய்ப் பல் விளக்கி விட்டு உடனேயே முழுகிவிடவேண்டும். நல்லாத் துண்ணூறு பூசிக்கொண்டு ஐயனார் கோயிலுக்குப் போய் சாமியைக் கும்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்துவிட வேண்டும்......அதற்குள் அம்மாயி என் னைக் கூட்டிக்கொண்டு போகத் தயாராக வாசலில் நிற்பாள்.........ஐயா நாற்காலி யில் சாய்ந்து கொண்டிருப்பார், அம் மாயி போய், அவரிடம் சமாசாரத்தைச் சொல்லுவாள். 'எலே எங்கேடாலே வந்தே, போக்கிரிப் பயலே?' என்று ஐயா கேட்பார். 'அம்மாயிகூட வந் தேன்...ஏதாச்சிம் யஜமானிடம் சொல்லி வேலைக்கு வச்சுக்கச் சொல்கிறேன் என்று அழைத்துக் கொண்டு வந்தாள்' என்று சொல்வேன்.

'அத்திரிக் கொடக்கல்! பூனையாட் டமா இருக்கிறாய்! வேலை செய்து சம் பாரிக்க வந்தியா! பள்ளிக்கூடத்தில் படிக்கிறது தானேடா!' என்று பரிகாச மாகக் கேட்பார்......" அவ்வளவுதான். வேறொரு கற்பனை குறுக்கிட்டு மேற்படி மனோசித்திரத்தைக் கலைத்துவிட்டது.

'ஐயா வீட்டுக்குப் போகிறேனா? கிணற்றடியில் ஐயா பல் தேய்த்துக் கொண்டிருப்பார். என்னைக் கண்டதும் 'காலங்காத்தாலே ஆத்தாள் முந்தானை யைப் பிடித்துக்கொண்டு வந்தியா?' என்று கேட்பார். அம்மாயி பதில் பேசாமல் இருப்பாள். ரகசியமாக நான் அவளிடம் சொல்வேன், 'ஐயாவிடம் சொல்லேன்! அப்புறமானால் ஐயா ஆபீஸ் ரூமுக்குப் போய்விடுவாக' என்று. உடனே அம்மாயி, அவரிடம் விஷயத்தைச் சொல்வாள்.........ஐயா சில்லுண்டி வேலைகளுக்கு என்னை வைத் துக் கொள்ளுவார்...விளக்குகளுக்கெல் லாம் எண்ணெய்விட்டுச் சுத்தம் செய் வேன். துளிக்கூட எண்ணெய் கீழே சிந்தாது. விளக்குகளெல்லாம் பள பள வென்று மின்னும்...ஐயாவுக்கு வரும் கடிதங்களை எல்லாம் தபாலாபீசில் போய் வாங்கி வருவேன்......என்னிடம் அவருக்கு மிகவும் பிரியம் ஏற்பட்டு விடும்.........கொஞ்ச நாட்களான பிறகு என்னைக் 'கச்சேரிப்யூன்' வேலைக்கு வைத்துக் கொண்டுவிடுவார்......டவாலி யுடன் ஐயா பெட்டியை நான் கொண்டு போவேன்.........சாயந்திரம் யஜமான் குழந்தையை உலாத்துவதற்குக் காவிரி மணலுக்கு அழைத்துச் செல்வேன்...... ஐயா ஒரு நாள் என்னைக் கேட்பார் 'ஏண்டா தம்பையா, கண்ணாலம் பண் ணிக்கொள்ளாமல் எத்தனை நாள் காலங் கழிக்கப் போகிறாய்?' என்று......"

இவ்வளவு தூரம் கற்பனை ஓடிய பிறகு அவனை யறியாமல் ஓர் அசட்டுச் சிரிப் பும், மாப்பிள்ளை முறுக்கும் உண்டாயின. எல்லாம் கிழிசல் பாயில் புரண்டபடியே! கலியாண விஷயத்தைப் பற்றிய சிந்தனை யில் அவன் மன அலைகள் மோத ஆரம் பித்தன. வெகுநேரம் வரையில் பலவித மான குருட்டு யோசனைகள்.

இம்மாதிரி வெவ்வேறு தினுசான வழிகளில் மனதை அலையவிட்டபடியே ஒருவாறு தூங்கினான்.

ராத்திரியும் கழிந்தது. விடியற்காலை யில் பக்கத்துக் குடிசையில் கோழியை 'அடித்த'போது, அது பதறினது கூட அவனுக்குத் தெரியாது. அவன் விழித்

தெழுந்த போது அம்மாயி ஐயா வீட்டுக்குப் போயிருந்தாள்.

வாய்க்காலில் போய்ப் பல் தேய்த்து விட்டு மறுபடியும் குடிசைக்கே வந்து சேர்ந்தான். வெகு நேரம் வரையில் அவன் மனது இடிந்து போய் உட்கார்ந்திருந்தான். கடைசியில், மறுநாள் காலையிலாவது கொஞ்சம் முன்னெச்சரிக்கையுடன் விழித்தெழுந்து அம்மாயியுடன் போவது என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டு, பானையிலிருந்து 'நீராகார'த்தை எடுத்துச் சாப்பிட்டான்.

அன்று அம்மாயி வர அதிக நேரம் ஆயிற்று. ஒரு நாளும் அத்தனை நாழிகை தாமதிப்பது கிடையாது. சுமார் பதினைந்து நாழிகைக்குத்தான் திரும்பி வந்தாள். அப்போது, அவள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் குடிசைத் திண்ணையில் உட்கார்ந்து 'தங்க ரத்தினமே' பாட்டைப் புலம்பிக்கொண்டிருந்த தம்பையா தன் தாயாரைக் குற்றம் சாட்டும் பாவனையில் அலக்ஷியமாகப் பார்த்தான்.

சற்று நேரம் கழித்து "அம்மாயி, நாளைக்காவது மறக்காமல் என்னை எழுப்பியாவது ஐயா வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகிறாயா?" என்று கோப த்வனியுடன் தாயாரைக் கேட்டான்.

அவள் கண்களில் இத்தனை நேரம் பதுங்கிக் கிடந்த நீர்த்தாரைகள் பலபலவென்று உதிர்ந்தன. உதடுகள் துடித்தன. "ஐயோ, பாவி, எந்த வேளையில் உன்னை ஐயாவிடம் கூட்டிக்கொண்டு போகிறேன் என்று சொன்னேனோ!..." அவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை.

"என்ன அம்மாயி, யார் உன்னை என்ன சொன்னார்கள்?...ஐயா வீட்டில் உன்னை வேலைக்கு வேண்டாம் என்று தள்ளிவிட்டார்களா?" என்று அவன் கேட்டபோது, தன் தாயார் வருத்தப்படயார் காரணமாக இருந்தாலும் அவரைப் பஸ்மமாக்கி விடுவது போன்ற மாதிரியில் கண் விழிகள் விரிந்தன.

சற்று நேரமாயிற்று அம்மாயியின் விம்மல் நிற்பதற்கு. "என்ன பண்ணுவது? ஐயனருக்கு என்ன தப்புச் செய்தோமோ?... திடீரென்று நம்ப ஐயாவை வடக்கே எங்கேயோ மாத்தி, உத்தரவு வந்திருக்கிறதாம். நாளைக் காலையில் எல்லோரும் புறப்பட்டுப் போறாக. என் மனசு அடித்துக் கொள்ளுகிறதே! புண்யவான்கள் கையாலே சோறு வாங்கிச் சாப்பிடக் கொடுத்து வைக்கவில்லை!..." என்று சொல்லிவிட்டு மறுபடியும் அழ ஆரம்பித்து விட்டாள்.

தம்பையாவுக்கு ஒன்றும் புரியவில்லை. தலை சுற்றியது. அப்படியே சுருண்டு படுத்து விட்டான்.

செப்டம்பர் 29-ந் தேதி

சென்ற செப்டம்பர் 29-ந் தேதி உலக யுத்தம் மூள இருந்தது எப்படித் தடுக்கப்பட்டது என்ற ரஸமான விபரம் இப்போது தெரிய வருகிறது.

இதாலியின் அந்நிய நாட்டு மந்திரி வியானோ பிரபு இதைப்பற்றிக் கூறியிருக்கிறார். செப்டம்பர் 28-ந் தேதி யன்று ஜெர்மனி போருக்குத் தயாராக இருந்தது. இதாலியும் யுத்த சந்நதமாக இருந்தது. ஜெர்மனியும் இதாலியும் ஒன்று சேர்ந்து தங்கள் தளகர்த்தர்களைக் கூட்டி ஆலோசனை செய்யத் தயாராக இருந்தன.

சண்டை மூள நான்கு மணி நேரங்களே இருந்தன. அந்த சமயத்தில் ஆங்கில தூதரான பர்த் பிரபு வியானோ பிரபுவைப் பார்க்க வந்தார். ஆங்கில தூதர், முசோலினி ஹிட்லருடன் பேசி சமாஸமுண்டாக்க வேண்டுமென்று சேம்பர்லேனிடமிருந்து ஒரு செய்தி கொண்டு வந்திருப்பதாக உருக்கத்துடன் கூறினர். உடனே முசோலினி பெர்லினிலுள்ள இதாலியின் தூதருக்குக் கட்டளை பிறந்தது. "உடனே ஹிட்லரைக் கண்டு நான் எப்படியும் உங்கள் பக்கத்தில் இருக்கிறேன். ஆனல் யுத்தத்தை 24 மணி நேரத்திற்கு ஒத்திவையுங்கள். அதற்குள் இந்தச் சிக்கலைத்தீர்க்க வழிதேடுகிறேன் என்று தெரிவிக்கும்படி" கட்டளையிட்டார். "அந்தத் தந்திதான் கோர யுத்தத்திலிருந்து மனித சமூகத்தைக் காப்பாற்றியது." என்று வியானோ கூறினர்.

விசேஷக் கடிதம்

"வஸந்தன்"

(ஸ்ரீமதி காமாட்சிக்கு எழுதிய தபாலைத் தூண்டுதலின்பேரில் வெளியிடுகிறேன். எவ்வளவோ தடவை பலவிதமாகச் செய்யப்பட்ட தூண்டுதலை நான் தாங்க முடியாமல் இதை வெளியிட வேண்டியிருக்கிறது. அடேயப்பா, இதை வெளியிடா விட்டால் எத்தகைய அபாயம் வந்திருக்கும் தெரியுமா? இருக்கட்டும், யார் அப்படி உபத்திரவப் படுத்தினார்கள், என்று தானே கேட்கிறீர்கள்? ஏன், காமாட்சியே தான். "உங்கள் கடிதத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிறேன். நாலு பேருக்கு அதை வாசித்துக் காண்பியுங்கள். அதற்கப்புறம் தெரியும் உங்கள் பவிஷு" என்று எழுதியிருக்கிறாள். அப்படி அவள் கேட்டுக்கொள்ளும் பொழுது நான் பஹிரங்கமாக இக்கடிதத்தை வெளியிடாமலிருக்கலாமா?)

சென்னை
19—11—1938

சௌபாக்யவதி காமாட்சிக்கு,

ஆசீர்வாதங்கள். மகா துக்கத்தோடு உனக்கு இந்தக் கடிதத்தை எழுதவேண்டி யிருக்கிறது. என்ன இருந்தாலும் நீ ஒன்று விட்ட அத்தை பெண்ணல்லவா? ஆகையால் உனக்குக் கடிதம் எழுதாமலே பேசாமல் இருந்து விடுவதற்கில்லை. அதுவும் உன் தகப்பனார் முகூர்த்த விஷயமாக ஒரு மாதமாய் என்னிடம் பேசி வருவது உனக்குத் தெரிந்திருக்கலாம். உனக்குக் கடைசியாக ஒரு கடிதமெழுதி விட்டு இந்த கலியாண விஷயத்தை மறந்து விடலாமென்று நினைக்கிறேன்.

முதலாவதாக, உனக்குக் கடிதம் எழுதக்கூட எனக்குப் பிடிக்காததன் காரணம் உன் பெயர் 'காமாட்சி' யாக இருப்பதுதான். எவ்வளவோ நல்ல பெயர்களெல்லாம் இருக்கின்றனவே, அதை யெல்லாம் விட்டுவிட்டு உனக்குக் காமாட்சி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஸரோஜா, மலினா, மாலதி, நந்தினி, ஸம்யுக்தா, பிரபா, மேரி, மோஸஸ் என்று ஏதாவது நல்ல பெயர் வைக்காமல் காமாட்சி, மீனாட்சி, லக்ஷ்மி என்று பெயர் வைப்பது எவ்வளவு கர்நாடகம்! ஹிந்து தேவதைகள் பெயரை வைக்காமல் என்றைக்கு ரோஸ், ரூபி போன்ற நாகரீகப் பெயரை ஒவ்வொரு குழந்தைக்கும் வைக்கப் போகிறோமோ அன்றைக்குத் தான் நமக்கு விமோசனம். இப்போது இருக்கும் நிலைமையைக் கவனிக்கும்போது விமோசனம் இதோ அருகிலிருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது.

போகட்டும்; உனக்கு நன்றாக எழுதப் படிக்கத் தெரியுமென்று உன் தகப்பனார் சொல்கிறார். உனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியுமாம். வீணை ரொம்ப நன்றாக வாசிப்பாயாம். ரொம்ப சரி. ஆனால் நீ காலேஜைக் கூட எட்டிப் பார்க்கவில்லையே, என்ன பிரயோஜனம்? காலேஜில் சேர்ந்து ஒன்றும் பாஸ் பண்ணாவிட்டால்கூட கொஞ்சநாள் அதில் சேர்ந்து படித்தால்தான் நாகரீகத்துக்கு அர்த்தம். காலேஜ் பேச்சும், பழக்க வழக்கங்களும், தோரணையும், டிரஸ் பண்ணிக் கொள்ளும் வழியும் உனக்குத் தெரியாமல் இருக்கும் போது உன்னை வருத்தத்துடன் அநாகரீகம் பிடித்தவள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

உனக்கு ஒரு விளையாட்டுக் கூடத் தெரியாதென்று உன் தகப்பனார் சொன்னார். என்ன? உனக்கு ஒன்றுமே தெரியாதா? பாட்மின்டன் விளையாடத் தெரியாதாம். டென்னிஸ்கூட விளையாடத் தெரியாதென்கிறார். சிவ, சிவா! டென்னிஸ் விளை

யாடத் தெரியாமல் எந்தப் பொம் மண்டாட்டியாவது இருப்பாளா? ஹாக்கி, குஸ்தி முதலிய விளையாட்டுக்களை பெண்மணிகள் தெரிந்து கொண்டால் மணவாழ்க்கையில் மிகவும் உபயோகமா யிருக்கு மென்பதை நீ ஏன் தெரிந்து கொள்ளவில்லை?

நீ லேடீஸ் கிளப்பில் மெம்பரல்ல என்ற விஷயத்தைக் கேட்டுத் திடுக்கிடுகிறேன். என்ன அநியாயம்? லேடீஸ் கிளப்பில் சேராமல் யாராவது இருப்பதுண்டா? அங்கே பேசலாம், விளையாடலாம், சிநேகிதிகளுடன் இன்பமாகக் காலத்தைக் கழிக்கலாம். அப்போதுதானே ஸ்திரீகள் முன்னேற்றம் உண்டாகும். சமத்வம் உண்டாகும். லேடீஸ் கிளப்பில் சேராவிட்டால் எப்படி சமத்வம் உண்டு? இன்றுமட்டும் இந்த தேசத்தில் லேடீஸ் கிளப் இல்லாவிட்டால் அத்தனை பெண்களும் இருந்த இடம் தெரியாமல் இறந்து போயிருப்பார்களென்று நீ அறிந்து கொள்ள வேண்டும். லேடீஸ் கிளப்பைக் கண்டால் உனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லையாம். அவைகளெல்லாம் அநாவசியம் என்று சொல்லுகிறாயாம். ஹூம்! உனக்கு நான் என்ன சொல்ல! சாயங்கால நேரங்களில் வீட்டுவேலை செய்தோ, பாடிக்கொண்டோ, படித்துக் கொண்டோ, அல்லது பீச்சுக்குப் போய் நிர்மலமான காற்று வாங்கிவிட்டு வந்தாலோ பொழுது போய் விடுகிறது, லேடீஸ் கிளப்புக்கு ஏன் போக வேண்டும் என்று கேட்கிறாயாம். ஐய! உன்னைப்போல ஒரு அசடை நான் பார்த்ததே இல்லை.

நிஜமாய்த்தான் கேட்கிறேன். நீ ஒரு சினிமா கூடப் பார்க்கப்போவதில்லையா? வாரத்துக்கு இரண்டு தடவைகூட? சரியாய்ப் போச்சு. நரஜன்மமெடுத்து இங்கிலீஷ் படம் பார்க்கா விட்டாலும் தமிழ்ப் படம் கூடப் பார்க்காவிட்டால் என்ன பிரயோஜனம்? தமிழ்ப் படங்களின் உபயோகத்தை நீ நன்கு தெரிந்து கொண்டு விட்டால் அதற்கப்புறம் பிரதிதினமும் சினிமாவுக்குப்போக வேண்டுமென்று கூறுவாய். ஒவ்வொரு பெண்ணும் சினிமா பார்த்தால் மட்டும் போதாது; அதில் சேர்ந்து நடிக்கக் கூட முயலவேண்டும் என்பது என் கொள்கை. இந்தக் கொள்கையை அநேக தமிழ்ப் பெண்கள் சில காலமாக அறிந்து அவலம்பித்திருப்பதைக் கண்டு நான் சந்தோஷப் படுகிறேன். பெரிய குடும்பப் பெண்மணிகள் சினிமாவில் சேர வேண்டுமென்று ஒரு இயக்கமும் சமீபத்தில் கிளம்பியிருக்கிறது. நல்ல வேளை, உன்னைப்போல உலகம் பைத்தியம் பிடித்துப்போய் விடவில்லை.

இதெல்லாம் போகட்டும், நான் நேரில் உன்னைப் பார்க்க வந்தபோது நடந்த சம்பவங்களைப் பற்றிக் கூறுமலிருந்தால் என் ஆத்மா திருப்தியடையாது. நான் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தபோது நவராத்திரி. நீ கொலு வைத்திருந்ததைப் பார்த்து உன் அசட்டுத் தனத்தை அறிந்து கொண்டு விட்டேன். இந்தக் காலத்தில் கொலுவாவது? அட கர்மகடமே! எந்த நாகரிகப் பெண்ணாவது இப்படி வேலை மெனக்கட்டு பொம்மைக் கொலு வைத்து விளையாடிக் கொண்டிருப்பாளா? நீ மத சம்பந்தமான ஐதீகங்களைச் சொல்லி கொலு அவசியம் வேண்டுமென்பாய். ஆனால் இப்படிச் சொல்வது மூட நம்பிக்கை என்று உன் நாகரீக சகோதரிகளைக் கேட்டால் சொல்லுவார்கள். உனக்குச் சந்தேகமிருந்தால் சில நாகரீகமான பெண்கள் வீட்டுக்குப் போய்ப் பார்; நவராத்திரியின் போது கொலு வைக்க மாட்டார்கள்.

அன்று நீ கொசவம் வைத்துக் கட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் எனக்கு மயக்கம் வந்தது. சென்னை காலேஜ்களில் சில மாணவிகள் புடவையை எப்படிக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்ப

தைப் பார்த்திருந்தால் 'நாகரீகம் என்றால் என்ன?' என்பதை அறிந்து கொண்டிருப்பாய். வெள்ளைக்கார மாதர்களைப் போல 'கௌன்' போட்டுக் கொண்டால் தான் நாமும் நாகரீகமுள்ளவர்கள் என்று தைரியமாய் சொல்லிக் கொள்ளலாம். இப்போது சில கிறிஸ்தவப் பெண்களும் மலையாளப் பெண்களுமே 'கௌன்' போட்டுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழ் அகங்களிலும் சிறு குழந்தைகளுக்கு 'கௌன்' போடும் வழக்கம் நன்றாகப் பரவிவிட்டது. சில 'பெரிய' குடும்பங்களில் 10 வயதுள்ள பெரிய குழந்தைகள் கௌன்கள் போட்டுக் கொள்கின்றன. இந்தப் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக முதிர்ந்து பரவி 70 வயதுக் குழந்தைகள்கூட கௌன் போட்டுக் கொள்ளும் குதூகலமான காலம் சமீபத்தில் வந்து விடும் என்று நம்புகிறேன். நிலைமை இப்படியிருக்கும்போது நீ 'கொசவம்' வைத்துக் கொண்டிருக்கிறாய்.

இன்னும், தலையில் ஒரு பந்து கனகாம்பரம் வைத்துக் கொண்டிருப்பது நாகரீகம் என்பதை நீ அறியவில்லை. நீ பின்னலை வெளியே எடுத்து விட்டுக் கொண்டிருந்தாய். மற்ற நாகரீகப் பெண்களைப் போல் பின்னலை மேலாக்குக்குள் மறைத்துக் கொள்ளாமல் இருந்தது பெரிய குற்றம். இந்த ஒரு குற்றத்துக்காகவே உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று தோன்றுகிறது.

(கர்ணம் வெங்குவய்யர் சம்ஸாரம் சுப்பம்மாள் புதிதாக வீட்டு வேலை செய்ய வந்தவளைப்பார்த்து) "அடியே மங்களம்! ஐயோடி......உன் பேரென்னடி?"

"என் பேராம்மா சொர்ணம்"

"சொர்ணமா! இந்த கிராமாந்தரத்லே வம்புக்கு குறைச்சல் இல்லை, முன்ன வீடு கூட்டிண்டிருந்தாளே மங்களம், அவ பெரிய வம்புக்காரி. அதான் அவளை தள்ளிட்டேன்?"

"நான் அந்த மாதிரி வம்புக்காரி இல்லை அம்மா. பெரிய பண்ணை வூட்லே முந்தி வேலை செஞ்சுகிட்டிருந்தேன். அந்த அம்மா ஐயருக்குத் தெரியாமெ நகை எல்லாம் அடகு வச்சுட்டாங்க. அது எனக்கு நல்லா தெரியும். யாருகிட்டயாவது நான் மூச்சு விட்டிருப்பேனே. நமக்கு என்னாத்துக்கு அந்த பாவம்!"

தமிழ் காட்சிப் படங்கள்

(ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.)

இப்பொழுது சுமார் பத்து வருஷ காலங்களாக, பேசும் படக் காட்சிப் படங்களின் பெருமையே வெகுவாகப் பெருகிவருகிறது. இந்தியாவிலேயே, தேச பாஷையில் தயாரிக்கப்பட்ட படங்கள் கணக்கில் அகப்படமாட்டா. ஆங்கிலேயர்கள் இவ்வழியில் தெரிந்து உபயோகித்து வரும் எவ்வித சாமர்த்தியமான முறைகளையும், நம் இந்தியர் கற்று உபயோகித்து வருகின்றனர். இப்படங்கள் தயாரிக்கும்பொருட்டு, வருஷத்திற்கு வருஷம் கோடிக் கணக்கான ரூபாய்கள் இந்த ஏழை தேசத்திலும் செலவிடப்பட்டு வருகின்றது. பெரிய பணக்காரர்கள் இதையே ஓர் வியாபார முறையாகக் கைப்பற்றி மிகுந்த லாபங்களை எதிர்பார்த்து ஏராளமானதொகைகளை இத்துறையில்போட்டிருக்கிறார்கள். தற்சமயம் பலவிதமான கலைஞர்களுக்கு இம்முறை உபகாரமாகவே இருக்கிறது. ஒருவாறு, இப் படத்தொழில் தொழிலில்லாக் கலக்கமுடையஇந்நாளில், பலருக்குத் தொழில் அமைத்துக் கொடுப்பதால் நன்மை செய்வதாகவே கருதலாம். படங்களின் மூலமாக ஏழ்மையினின்றும்உத்தாரணம்அடைந்தவர்களும், முன் அடையாத கியாதி அடைந்தவர்களுமான கலைஞர்கள் பலர் இருக்கிறார்கள். ஏனெனில், இம்முயற்சியில் பல விஞ்ஞானிகள் ஒருமைப்பட்டு தங்கள் தங்கள் அறிவு நுட்பத்தை உபயோகப்படுத்தினால் தான் இது பயன்படுமாறு செய்யக் கூடும். சாதாரணமாக, நாடகத்திற்கே வசனம், கீதம், நாட்டியம், உடுப்பு, திரை முதலியன சேர்ந்து சிறப்பிக்க வேண்டும், சினிமாவிலோ இன்னும் பலவித கலைகளினுடைய உதவி வேண்டியதா யிருக்கிறது. உதாரணமாக, ஒலிப் பதிப்பு, படம் பிடித்தல் முதலியன.

இவ்விதமாக, பலவித அங்கங்கள் நிரம்பப் பெற்றவர்களை வைத்துச் சிறப்பிக்கச் செய்வது என்பது மேற்றிசையாரின் முறை. அவ்விதமே நம் நாட்டிலும், ஒவ்வொரு பிரிவின் சிறப்பிற்கும், ஒவ்வொருவரை உத்தரவாதியாக நியமித்து பகிர்ந்து கொடுப்பதும் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. இது பேசும் படம் பார்த்த யாவரும் அறிந்த விஷயமே. ஏனெனில் படக்காட்சி துவக்கப்படுவதற்கு முன்னதாக அப்படம் தயாரிப்பதற்கு உதவி செய்தவர்கள் யார் என்றும், எந்தெந்த அம்சத்தில் உதவி செய்தார்கள் என்றும், வியக்தமாக எழுத்தில் காண்பிக்கப் படுகிறது. இவை எல்லாம் சரியே. ஆனால், மேல்திசைப் படத்துக்கும், நம் படத்துக்கும், சிறிது வேற்றுமை புலப்படுகிறது. நம்மவர்களில் மிகவும் அறிவாளிகளாக உள்ளவர்கள் அபிப்பிராயம் சொல்லுங்கால், யேல் திசைப் படங்களைப் போல் தயாரிப்பதற்கு நம்மவர்களுக்கு இன்னும் சாமர்த்தியம் ஏற்படவில்லை என்று சற்று மனக் குறையைக் காண்பிக்கின்றனர். இன்னும் மற்ற பாஷையில் இயற்றப்படும் படக் காட்சிகளை தமிழ்ப் படங்களுடன் ஒப்பிட்டு பார்க்குங்கால், வெகுவாக தமிழ்ப் படங்களின் கீழ்த் தரங்களைப் பற்றி குறை கூறாதவர்கள் இல்லை. இதற்கு என்ன காரணம்? நம்முடைய படங்களில் பிரசித்தி பெற்ற நடிகர்கள் நடிக்கவில்லையா? உயர்ந்த சங்கீதப் பயிற்சி யுள்ளவர்கள் பாடவில்லையா? முதலாளிகள்தான் போதுமான பணத்தைச் செலவிடவில்லையா? பணமும், கருவிகளும், கலையும், ஒருங்கே சேர்ந்து விடுமானால், எப்படிக் குறைகள் வரும்? ஆனால், பெரும்பான்மையோர் உண்மையாகவே தமிழ்ப் படங்களைக் கீழ்த் தரமாக நினைக்கின்றனர் என்பதை மறக்க முடியாது. காரணத்தைத்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

காரணமும் பலர் கூறியிருக்கிறார்கள். எனக்குத் தோன்றினதை நானும் கூறுகிறேன். இவ்வளவு பிரயாசைப்பட்டும் இவ்வளவு சங்கீத வித்வான்கள் ஈடுபட்டும், தமிழ் டாக்கிக்குக் கெட்ட பெயர்தான் என்றால் நமக்கு அவமானமாய்த் தானிருக்கிறது. இதென்ன பிரமாதம், காரணத்தைக் கண்டு பிடித்து உடனே சீர்திருத்தினால் போகிறது என்று நீங்கள் நினைக்கலாம். இது அவ்வளவு லகுவான காரியமல்ல. காரணத்தை எப்படிக் கண்டு பிடிப்பது? "ப்ரொடியூஸர்"களைக் கேட்டால் எல்லாம் நாங்கள் சரியாகத்தான் செய்கிறோம்? நன்றாயில்லாவிட்டால் பணம் கோட்டையாகக் குவிகின்றதே எப்படிக் குவியும்? அலுவலற்றவன் எவனாவது போகிற போக்கில் பேனாவைப் பிடித்து மனதுக்கு தோன்றியதெல்லாம் எழுதுகிறான். கட்டின வீட்டிற்கு குற்றம் சொல்ல எல்லாரும் வல்லவர்கள்தான். எங்கே, ஒரு படம், இந்தபேனாப்

பிரஸங்கிகள் தயார் செய்துகொண்டு வரட்டும் பார்த்து விடுவோம் என்று வீச்சாகத் தான் பேசுவார்கள். அவர்களின் குறி ஒன்று தான்: "கொள்ளையான லாபம், அதுவர வழியைப் பாருங்கோன்னு." பெருங்காயம், பற்பொடி, ஸேப்டிரேஸர், ஸ்னோ, உப்பு, பருப்பு, மிளகாய் வத்தல் இவைகளில் முதல் போட்டு லாபம் எடுப்பதுபோல் படம் பிடிப்பதும் ஓர் வியாபாரத் துறையாக கருதுகின்றனர். எப்படிச் செய்தால் நன்றாயிருக்கும் என்பதற்குப் பதிலாக எப்படிச் செய்தால் பணத்தை வாரிக்கொட்டலாம் என்று ஆலோசிக்கிறார்கள். நன்றாயிருக்கும்படி செய்ய வழி தெரிந்தவர்களுக்கும் பணத்தை ஏராளமாகச் சம்பாதிக்கும் வழியை உபதேசிப்பவர்களுக்கும் இவ்வுலகின் திட்டப்படி ஸ்னனப்பிரசக்தி கூட இராது.

பாமரர்களுக்கு மோகத்தைமூட்டி பணத்தைப் பறிப்பதற்கும், கலைஞர் மனம் மகிழ்ந்து கொண்டாடும்படி ஒரு சில்பத் தொண்டு புரிவதற்கும் ஏர்வை சுமாராகத் தானிருக்கும். "ப்ரொட்யூஸர்ஸ்" ஒரு அணு தரைக்காரர்களுக்கு படம் பிடிப்பதாய் நினைக்கிறார்களே ஒழிய நாற்காலி, ஸோபா நபர்களை லக்ஷியமே செய்வதில்லை. அவ்விதத் தரை டிக்கட்டு மகாஜனங்களுக்கு இன்னது பிடிக்கும் பிடிக்காது என்ற விஷயத்தில் அவர்களே ஸர்வக்ஞர்கள் என்று நினைத்துக்கொண்டு விடுகிறார்கள். இந்த நினைப்பு அவர்களுடையதாதலால் கதை பொருக்குவது, வசனம் எழுதுவது, கதையின்பாகங்களை நன்றாக ஒன்றுக்கொன்று பொருத்துவது, உபகதைகளை ஹாஸ்யத்திற்காகப் புகவிடுவது முதலிய வேலைகளையும் அவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள். பிறருடைய கதைகளை எடுத்துக் கொண்டாலும் அவைகளை அவர்கள் உருத்தெரியாமல் மாற்றி விடுகிறார்கள். எதிலோ ஆரம்பித்து எதிலோ முடித்து, கதையை வாலுந்தோலுமாகக் கிழித்துப்போட்டு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிப்புப்போட்டு, கதாபாத்திரங்களை நிமிஷத்திற்கொரு மாதிரியான மனோபாவம், நடவடிக்கை, இயற்கையுடைய கலவங்கீரையாகப் பண்ணி "கொண்டு வந்தேன். ஆரம்பத் தேதியை எதிர்பாருங்கள். லக்ஷ ரூபாய் படம். வண்டுநாதம் வெங்கிட்டாவும், தோகைமயில் தேவகி அம்மாளும் நடிக்கும் ஸாஸசுந்தரி வருகிறது, வருகிறது" என்று உலகெங்கும் ஜெயபேரிகை அடித்து விடுகிறார்கள். "அட்வர்டைஸ்மெண்டு" என்று இருக்கிறதல்லவா? வியாபாரிகளுக்குக் கலியுக கற்பவிருக்ஷம். எங்கு புரட்டினாலும், "ஸரஸசுந்தரியில் வீவில் வேணுகோபாலன்" "ஓர் காதல் காக்ஷி" என்ற இவ்விதமான படங்கள் எங்கு திரும்பினாலும். அல்லாமல் போட்ட பணத்தை எடுக்க முடியுமா? ஆனால் நான் ஆராய்ந்து பார்த்த அளவில் தரை மஹாஜனங்கள் தான், படம் பார்க்கும்போது தன்முன் நிற்கும் பிரபல ஸ்டாரின் நிழலைப் பார்த்து, "ஏதாவது பாட்ரதுன்னா பாடு, இல்லாட்டா உள்ளே போ என் சும்மா போது போக்கறே? தெரியும் தெரியும் உன் பேச்செல்லாங்ரே, ஹே!" என்று உத்திரவு போட்டுவிட்டு வாயிலிருந்து புறப்படும் புகைப்படலத்தில் முகத்தை மறைத்துக் கொள்கிறார்கள். நாற்காலி மஹாஜனங்கள் வாய்திறந்து சொல்லாததை அவர்கள் உடனேயே சொல்லி விடுகிறார்கள்.

இதனால் "டேஸ்டு" விஷயத்தில், தரை மஹா ஜனங்களைக் கேவலமாக மதித்து அவர்களுக்கு ஏற்றவாறு படம் தயாரித்ததாய் எண்ணம் கொள்ளும் "ப்ரொடியூஸர்ஸ்" பேதமை வெளியாகின்றது. மேலும் பாமர ஜனங்களுக்கு ருசி தாழ்ந்ததென்றே வைத்துக்கொண்டாலும் அப் பசியையே அவர்களுக் காற்றி, அவர்களுக்குத் திருப்தி செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொள்வது சமூக முன்னேற்றத்திற்கு வழிபடுவோர்க்கு அழகல்ல. நல்ல ருசியைக் காட்டினால் அவர்களுக்கு வாந்தி எடுக்குமா என்ன? அவர்களிடம் கருணை யுள்ளவர்கள் அவர்களின் வாழ்க்கை அறிவை, உயர்த்தக் கூடியதும், ருசியை மேம்படச் செய்யத் தக்கதுமான கதையை யல்லவா காண்பிக்க வேணும்? மனோகரமாய் இருப்பதை அவர்கள் வெறுப்பார்கள் என்றும், ஆதலால் ரஸாபாஸமானதும், உன்னத சில்பச் சிறப்புகளை அறவே களைந்ததுமான கதைகளே அவர்கள் சுவைக்கு இனிதாகும் என்றும் குரங்குப்பிடி பிடிப்பது, அவர்களின் முன்னேற்றத்திற்காக கருத்துள்ளவர்கள் இயல்பாகாது. எனக்கு அறிமுகமான சில சினிமா சிப்பந்திகளுடன் நான் எனது அபிப்பிராயத்தை சொல்லி யிருக்கிறேன். "ஏனையா இப்படி இந்தக் கதையை குட்டிச் சுவராக்க வேண்டும்? ஏனையா, எத்தனையோ கோடிக் கணக்கான கதைகள் மஹா மேதாவிகள் எழுதி வைத்திருக்கிறார்களே, சொந்தமாகக் கதை கட்ட தெரியா விட்டால் அந்தக் கதைகளில் ஒன்றை எடுத்துக்கொள்ளக் கூடாதா? இது என்ன காமிக்? சகிக்க முடியவில்லையே. இவ்வளவு கேவலமாகச் செய்ய வேண்டுமா? கொஞ்சம் உன்னத உணர்ச்சியினிடம் காருண்யம் காட்டக்கூடாதா?" என்றெல்லாம் புலம்பிப் பார்த்தேன். உஹூம், ஒண்ணும் காதில் போட்டுக் கொள்கிறார்கள் இல்லை. "உமக்கு திருப்தியாய் படம் பிடிப்பதானால் எங்கள்

காசை சமுத்திரத்தில் போட்டதுபோல்தான் ஆகிவிடும். உம் போன்றவர்கள் தமிழ்ப் படத்தையே பார்க்கக் கூடாது, நீர் வேண்டுமானால் இங்கிலீஷ்ப் படங்களைப் பாரும், அல்லது ஹிந்திப் படங்களைப் பாரும். உம் பேச்சைக் கேட்டு நாங்கள் நாசமாய்ப் போகிறதற்கா? வேண்டாம், வேண்டாமையா உம் உபதேசம்.''

பாருங்கள், இவ்வித பதிலைக் கேட்ட பிறகு, தமிழ் டாக்கி முன்னுக்கு வருமென்ற நம்பிக்கை எண்காதவழி தூரம் பறந்து போகிறது. பேசும் படத்தைச் சில்பமென்றாவது, கலை என்றாவது கருதாமல், வாணிஜ்யமாகக் கருதிவிட்டால் அது எப்படி கடைத்தேறப் போகிறது? ஏனையா, ஸங்கீதம் நன்றாயிருக்க வேண்டுமென்று முசிரி சுப்பிரமணிய ஐயரையும், எம். எஸ். சுப்புலக்ஷ்மியையும் அழைக்கிறீர்கள் அல்லவா? பாபநாசம் சிவனைப் பாட்டு இயற்றுபவராக வரிக்கிறீர்கள் அல்லவா? ஸ்டுடியோவைப் பொருக்குகின்றீர்கள் அல்லவா? காட்சிகளுக்காக இடம் இடமாய்ப் போய் படம் எடுக்கிறீர்கள் அல்லவா? டைரக்ஷனுக்காக டைரக்டர்களுக்கு ஏராளமான பணத்தைக் கொடுக்கிறீர்கள் அல்லவா? கதை நன்றாயிருக்க வேண்டும் என்று நீங்கள் என்ன கவலை எடுத்துக் கொள்கிறீர்கள்? கதை எழுதுவதை ஒரு சிற்பமாக நீங்கள் நினைக்கவில்லை போலும்'' என்றால் "யாருக்குத்தான் எழுதத் தெரியாது. ஒழிந்தால் நானும் ஆயிரம் கட்டுரைகள் எழுதுவேன்'' என்று பதில் என் காதில் விழுகிறது. சரிதான் அதற்கு மேல் நான் என்ன சொல்வது. ஏதோ அபிப்பிராயபேதம்! முசிரி சுப்பிரமணிய ஐயர் ஸங்கீத உலகில் எவ்வளவு உன்னத ஸ்தானம் வகிக்கிறாரோ இலக்கிய உலகில் அவ்வளவு உன்னதஸ்தானம் வஹிப்பவர்களைக்கொண்டு, ஸினிமாப் ப்ரொடியூஸர்ஸ் கதை எழுதச் செய்யவேண்டும் என்பது என் கருத்து. அப்படிச் செய்தால்தான் தமிழ் டாக்கிக்கு ஏற்பட்ட நீடித்த குறை நீங்கும் என்பது என் துணிபு. அப்படிச் செய்வதால்தான் இங்கிலீஷ் டாக்கிகளும், ஹிந்தி டாக்கிகளும் மேன்மை அடைந்திருப்பதாய் என் நம்பிக்கை. பாட்டிற்கு மதிப்பு கொடுப்பது போலவும் ஸினிமாக் கருவிக்காரராகிய விஞ்ஞானிகளுக்கு மதிப்புக் கொடுப்பதுபோலவும், உயர்ந் எழுத்தாளர்களுக்கும் மதிப்பு கொடுத்தல் வேண்டும். ஆனால் நான் ஏற்கனவே கூறியபடி இதில் அபிப்பிராய பேதம் இருக்கலாம். அது தமிழ் டாக்கிகளின் கால வித்யாஸந்தான்.

நமது புத்தக சாலை

	ரூ.	அ.
இரட்டை மனிதன் (ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் பி.ஏ. மொழி பெயர்ப்பு)	0	8
விஷ விருக்ஷம் (ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி பி.ஏ. மொழி பெயர்ப்பு)	1	8
துர்க்கேச நந்தினி (ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் பி.ஏ. மொழி பெயர்ப்பு)	1	4
எல்லோரும் ஓர் குலம் (ஸ்ரீ ப. ராமஸ்வாமி)	0	8
முருகன் ஓர் உழவன் (ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பு)	1	8
தேசபக்தன் கந்தன் (ஸ்ரீ கே. எஸ். வெங்கடரமணி எம்.ஏ., பி.எல்.)	1	0
ஜேக்கோஸ்லோவேகியா (ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா)	1	0
மாகாண சுயாட்சி (ஸ்ரீ ஏ. என். சிவராமன்)	0	8
ஆண்டு நிறைவு (வ. ரா.)	0	2
ஹிட்லர் (ஸ்ரீ வே. சாமிநாத சர்மா)	2	4
கண்ணன் என் கவி (ஸ்ரீமான்கள் கு. ப. ராஜகோபாலன் & பெ. கோ. சுந்தரராஜன்)	0	6

சுவேதாரண்ய ஆச்ரமம்,
7, வடக்கு மாட வீதி, மைலாப்பூர்,
சென்னை.

காந்தீயம்

“இந்தியாவில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் விவசாயிகள். அவர்கள் உழைப்பின் பலன் முழுவதையும் நாம் எடுத்துக்கொண்டாலோ, பிறர் எடுத்துக்கொள்ளும்படி அனுமதித்தாலோ, நமக்கு சுயேச்சை உணர்ச்சி இல்லை என்றுதான் அர்த்தம். நமது விமோசனம் குடியானவன் மூலமாகத்தான் உண்டாக வேண்டும். இந்த லாயர்களும் டாக்டர்களும், பணக்கார நிலச்சுவான்தாரர்களும் ஒன்றும் கொண்டுவரப் போகிறதில்லை.” இது காந்திஜி இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன் காசியில் செய்த பிரசங்கம்.

இவ்வார்த்தைகள் காந்திஜியின் மனப்போக்கைச் சுருக்கமாகக் காட்டுகின்றன. இந்த மனோபாவம் ‘ஸோஷலிஸ்ட்’ மனப்பான்மையைத் தவிர வேறில்லை, ஆனால் அஹிம்சைதான் அவரது எல்லாக் கார்யங்களுக்கும், தத்துவங்களுக்கும் அடிப்படையாகும். அவரது அபேதவாதம்தான் நமது நாட்டின் தற்காலத்திய சந்தர்ப்பங்களுக்கும் இந்தியரின் மேதைக்கும் பொருத்தமாக இருக்கும். அவரது அபேதவாதம் சாதாரணமாக நாம் அந்த வார்த்தையால் தெரிந்துகொண்டிருப்பதல்ல; முற்றிலும் வேறானது.

ஸோஷலிஸமும் தொழில் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளவை. முதலாளித்துவத்தின் கெடுதலைப் போக்க ஸோஷலிஸ்டுகள் தொழில் நிர்வாகத்தைச் சர்க்கார் செய்யவேண்டுமென்று கூறுகிறார்கள். சர்க்கார் நிர்வாகம் தற்போதுள்ள முதலாளித்துவத்தைக் காட்டிலும் நிச்சயம் மேலானதுதான். ஆனால் சர்க்கார் ஒன்று சேர்ந்த கட்டுப்பாடான ஸ்வரூபத்தில் ஓர் பலாத்காரம்தான் என்பது காந்திஜியின் அபிப்பிராயம்.

ஆகையால்தான் காந்திஜி விஷயத்தின் மூலத்திற்கே சென்று முதலாளித்துவத்தின் கெடுதலையும் சர்க்கார் நிர்வாகத்தின் தீமையையும் போக்க வழி தேடுகிறார். அதனால்தான் அவர் குடிசைத் தொழிலை முடிந்த மட்டில் பரப்ப வேண்டுகிறார். சர்க்கார் நிர்வாகத்தைக் குறைந்த பக்ஷமாகச் செய்ய வேண்டி நாம் ஒன்று சேர்ந்து முயற்சி செய்தால் தான் உண்மையான ஸோஷலிஸத்திற்கு வழி உண்டாகும்; முதலாளியின் கொடுமையும், சர்க்காரின் கொடுமையும் மறைய வழி உண்டு. அகில இந்திய சர்க்கா சங்கமும், கிராமத் தொழில் சங்கமும் காந்திஜியின் அஹிம்ஸா ஸோஷலிஸத்தின் அங்கங்களாகும். உண்மையான ஸோஷலிஸத்தின் அஸ்திவாரம் சேவைதான்; லாபமல்ல. இந்த இரண்டு சங்கங்களும் இதைத்தான் லட்சியமாகக் கொண்டிருக்கின்றன.

உண்மையான ஸோஷலிஸத்தின் லக்ஷணம் அஹிம்சைதான். பலாத்காரத்தை பலமுள்ளவர்கள் கையாண்டால்தான் பலன் உண்டு, பலமுள்ள சிறுபான்மையோர் பலாத்காரத்தைக் கைக்கொண்டு பெரும்பான்மை சமூகத்தைக்கூட ஆளலாம். ஜெர்மன் நாஸிக் கட்சி ஒருமித்த பலாத்காரத்தால் 100-க்கு 98 வோட்டுக்களைப் பெற்றது. ஒரு கட்சியின் பலாத்காரம் சிறந்த வீரர்களான ஜெர்மானியரையே தலைவணங்கச் செய்திருக்கும்போது போல்ஷவிக் ரஷ்யாவிலும் ஏன் அது நடந்திராது? நாஸி துப்பாக்கிக் குண்டுகள் ஜனங்களைக் கொல்லும்போது போல்ஷெவிக் குண்டுகளும் அப்படித்தான்செய்யும்.

ஆகவே, பலாத்காரமும் ஸோஷலிஸமும் ஒன்றுக்கொன்று முரணான வார்த்தைகள். மேல் நாட்டிலுள்ள ஸோஷலிஸம் ஹிம்சையைக் கண்டிக்காமலிருப்பதுமட்டுமல்லாமல் பலாத்காரத்தால் அதிகாரத்தை அடைய வேண்டுமென்ற கொள்கையுடையது. ஆனால் அது ஜனங்களின் நலத்துக்காகச் செய்யப்படுவது என்று அவர்கள் சொல்லி ரஷ்யாவின் ஆச்சர்யமான முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ‘ஜனங்களின் நலம்’

என்ற வார்த்தைக்கு அநேக அர்த்தமுண்டு, நம்மை ஆளும் பிரிட்டிஷார்கூட இந்தியாவின் நன்மைக்காக நம்மை ஆளுவதாகச் சொல்லுகிறார்கள்.

ஸோஷலிஸ்டுகள் தொழில் வளர்ச்சியையும், பலாத்காரத்தால் அதிகாரத்திற்கு வருவதையும் ஆதரிப்பது போலவே வர்க்கப் போரை (class-war) மனதில் கொண்டு ஜனங்களைத் தயார் செய்கிறார்கள். பலன் என்னவென்றால் வகுப்புத் துவேஷமும் மற்ற கஷ்டங்களும் தான்.

இந்த வகுப்புத் போருக்கு அஹிம்ஸைப் போரில் இடம் கிடையாது.

ஆனால், முதலாளிகள் நடத்தும் இந்த 'சுரண்டுதலு'க்கு முடிவில்லையா என்று கேட்கலாம். காந்திஜி அது இருக்கவேண்டுமென்றா சொல்கிறார்? இல்லவே இல்லை. இந்தச் சுரண்டுதலை நிறுத்த வேண்டும் என்று தான் சொல்கிறார்.

"முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இப்போது மேல் பார்வைக்குத்தான் சண்டை இருப்பதாகத் தோன்றுகிறது. தொழிலாளிகள் புத்திசாலியா யிருந்து தங்களை ஒன்று சேர்த்துக் கட்டுப்பாடான கட்சியானால் அதுவே பணத்தை விட மேலானது. இப்போது நடக்கும் சண்டை புத்திக்கும் புத்தியில்லாமைக்கும் தான். அந்தச் சண்டையை நடக்க விடுவது முட்டாள்தனம். புத்தியின்மை ஒழியவேண்டும்" என்று காந்திஜி சொன்னார்.

இந்தியாவிலுள்ள நமது ஸோஷலிஸ்டு நண்பர்கள் நமக்கு சுயேச்சை மட்டும் கிடைத்தால் போதாது, ஒரு ஸோஷலிஸ்டு அரசாங்கம் வேண்டும், வெள்ளை துரை போய் கருப்பு துரை வருவதாக இருக்கக் கூடாது, என்று சொல்லுகிறார்கள். அஹிம்ஸைப் போரின் வெற்றி பெரும்பான்மையான மக்கள் தாமாகவே போரில் கலந்து கொள்வதில் தான் இருக்கிறது. அந்தப் பெரும்பான்மை மக்கள் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்டு விட்டால், அப்போது உண்டாகும் ராஜ்யம் ஜனங்கள் ராஜ்யமாகத்தான் இருக்கும். அப்போது சில கருப்புதுரைகள் ராஜ்யமாக இராது. அது எப்போது உண்டாகுமென்றால் ஒரு சிலர் பலாத்காரத்தால் அதிகாரம் பெற்றால்தான். ஸோஷலிஸ்டுகள் மனதில் ஏதாவது குழப்பம் இருக்கவேண்டும் அல்லது பலாத்காரம் இருக்கவேண்டும். இப்போதுள்ள நிலையில் தேசம் அஹிம்ஸையையே கொள்கையாகக் கொண்டுவிட்டது.

நல்லவேளையாக நமது ஸோஷலிஸ்டுகள் மதத்தின் பேரில் போர் தொடுக்கவில்லை. இந்தியாவில் நாஸ்திகப் பிரசாரம் செய்தால் மற்ற ஸோஷலிஸ்டு கொள்கைகளைப் பிரசாரம் செய்யமுடியாது என்று அவர்களுக்குத் தெரியும். இது புத்திசாலித்தனம்.

அஹிம்ஸையின் தத்துவத்தை அறிந்து கொண்டுவிட்டால் காந்திஜியின் ஸோஷலிஸத்தை நாம் கைக்கொண்டுதான் ஆகவேண்டும். அதுதான் உண்மையான ஸோஷலிஸம். அந்த ஸோஷலிஸத்தில் சிறுபான்மையின் ஆட்சி கிடையாது; பெரும் பான்மையோரின் கொடுமை கிடையாது; எல்லோரது உரிமையும் ஒன்றுசேர்ந்த அந்த இன்பமான சேர்க்கையில் மிகத் தாழ்ந்த மனிதனுக்குக்கூட இடமுண்டு.

—'ஸர்வோதயா'வில் டாக்டர். பி. ஸி. கோஷ்.

நோபல் பரிசு

இந்த வருஷம் நோபல் பரிசுக்கு இரண்டு பேர்கள் போட்டி போடுகிறார்கள். 'ஆஸஸ்ட்' என்ற ஹங்கேரி பத்திரிகை ஸ்ரீ. சேம்பர்லேயின் பெயரைச் சிபார்சு செய்கிறது. ஆனால் இந்தியாவின் நண்பர்கள் மஹாத்மா காந்தியின் பெயரை பிரரேபித்திருக்கிறார்கள். யாருக்கு அந்தப் பரிசு கொடுக்கப்பட வேண்டும்?

'சமாதானத்தைக் காப்பாற்றுபவரைப்' பற்றித் தீர்மானிக்கும்போது, எந்த வழிகளால் அவர் முயன்றார் என்பதை நாம் பார்க்க வேண்டும். வழிகளைப் பார்க்கும்போது முடிவு நியாயமாக இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். சேம்பர்லேன் கைக்கொண்ட வழிகள் நியாயமானவையா என்று ஆராய வேண்டும்.

சேம்பர்லேனும் அவரது நண்பர்களும் மியூனிச் ஒப்பந்தம் இல்லாமலேயே உலகத்தை யுத்தத்திலிருந்து காப்பாற்றி யிருந்தால் அவர்களைப் போற்றி யிருப்போம். ஆனால் ஜெர்மனியின் பலாத்காரத்துக்கு முன் சேம்பர்லேன் பணிந்து மானத்தை விற்று விட்டார்.

காந்திஜி அஹிம்ஸா தத்துவத்தின் தீர்க்கதரிசி. போதுமான பலாத்கார உதவி இல்லாத ஒரு பலஹீனன் பலவானை எதிர்த்து லக்ஷயத்திற்காகச் சண்டை போடுவதுதான் அஹிம்ஸா தத்துவம். லக்ஷியத்தை விடாமல் அஹிம்ஸையுடன் போர்செய்வதுதான் சிறந்த வழி. கொடுமையின், பலாத்காரத்தின், அடிவேரை அறுக்கும்படி எல்லோரும் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடாக இருந்தால் வெற்றி அஹிம்ஸை யாளருடையது. காந்திஜியின் கொள்கைதான் யுத்தங்களைத் தடுக்கும் மூலாதார வழி. ஆகையால் நோபல் பரிசை காந்திஜிக்குக் கொடுக்க வேண்டும்.

—ஸ்ரீ பாதர் உஸ் ஸமான்.